செந்திலாண்டவன்
திருவடி துணை

# ஹைமவதி

## இது ஒரு திவ்ய சரித்திரம்

இது

வரகவி - திரு. அ. சுப்ரமண்ய பாரதி
இயற்றியது

சென்னை-திருவல்லிக்கேணி
ஆர். வெங்கடாசலம் கம்பெனியாரால்
பதிப்பிக்கப்பட்டது.

1918

காபிரைட் செய்தது.]

[விலை அணா 3.

# முகவுரை

---

ஹைமவதி என்னும் இச்சிறு புத்தகம், ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் மகா கவியாலியற்றப்பட்டு எல்லோராலும் கொண்டாடப்படும், ஸிம்பலயன் என்னும் நாடகத்தினை மனத்திற்கொண்டு வெகு சுருக்கமாய் நமது தேசத்திற்கொத்தபடி எழுதியதாகும். ஆங்கிலம் பயிலாதவர்களும் பள்ளிக்கூடச் சிறுவர்களும் அந்த அருமையான சரித்திரத்தின் அமைப்பையும் சுவையையும் எளிதிலுணர்ந்து பயன்பெறுமாறு கருதி இச்சிறு புத்தகம் எழுதப்பட்டதாகலின், கலாசாலை அதிகாரிகள் இதனைப் பிள்ளைகட்குரிய உப பாடப் புத்தகமாக அங்கீகரிப்பார்களென நம்புகின்றேன்.

குமார விலாசம்,
ராயப்பேட்டை,
2—9—18.

இங்ஙனம்,
திரு - அ. சுப்ரமண்ய பாரதி.

28108

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# ஹைமவதி சரித்திரம்

## அத்தியாயம்—1

இந்திரபுரி யென்னும் திருநகரிலே புவநேந்திரன் என்னும் ஒரு வேந்தனிருந்தான். அவன் தன் குடிகளுக்கு நல்லன நாடிச் செய்யும் சிரிய அறிவுடையவனாய் "இவன் நீடூழி வாழ்க" என்று தன் அரசெங்கும் புகழ விளங்கி வந்தான். இவனுக்கு எது இல்லை என்று வினவின் அதற்கு மறுமொழி பகையில்லை என்பதுதான் கிடைக்கும்! இவனுடைய நாட்டிலே நல்லவர்களும் அறிஞர்களும் விரும்பிக் குடியேறி வேண்டுவன அரசனாலே கொடுக்கப்பெற்று வெகு சுகமாக வசித்து வந்தார்கள். அரசன் நல்ல விவேகி; ஆதலினாலே பெரியோருடைய துணையையே பிரதானமாகக் கொண்டு அவர்கள் சொல்லும் வழியிலேயே எல்லாம் நடத்திவந்தான். அவனுடைய அமைச்சர்களும் நல்ல விவேகிகள். அவர்கள் ஆலம் வீழ்போல் அமைச்சனும் என்பதற்கிணங்க அரசனைத் தாங்கி வந்தார்கள்.

புவனேந்திரனுடைய மனைவியும் நல்லகுணசாலி; கணவனுக்கினியவள்; கற்பிற்கு அரசி; அவளுடைய

அரியகுணங்களிலே ஈடுபட்ட அரசன் அவளுடைய மனம்போலநடந்துநிகரற்றவாழ்வைநடத்திவந்தான்.

மாறுபடாத மனமுடைய இத்தம்பதிக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. வெகுநாட் சந்ததியில்லாம லிருந்து பிறகு பிறந்தமையால் அவ்வரசன் தன் அரண்மனைப் பெரியோர்களை அழைத்து அக் குழந் தைக்கு மங்களகரமான திருப்பெயர்சூட்டி யரு ளும்படி வேண்ட, அவர்கள் அக் குழந்தையின் இலக்ஷணங்களுக்கேற்றபடி ஹைமவதி எனப்பெய ரிட்டனர். அரசனும் மற்றும் அரண்மனை அமைச் சர்களும் " இப்பெயர் இக்குழந்தைக்கு ஏற்ற திருப் பெயர். இது ஸ்ரீராமனுக்கு, வசிஷ்டர் ஸ்ரீராமச்சந் திரன் என்னும் திருப்பெயர் சூட்டியதுபோல் அமைந்தது " என மெச்சிக்கொண்டனர்.

ஹைமவதியை அரசனும் அரசியும் மிகச்செல்வ மாக வளர்த்து வந்தனர். கேட்கவேண்டுமா ? இரா ஜைசுவர்யத்திலே பிறந்த குழந்தைக்குக் குறை வென்ன இருக்கும்! அதிலும் அரும்பெருஞ் செல்வ மாக வாய்த்த பெண்ணல்லவா ?

இவ்வாறு வளர்ந்து வந்த ஹைமவதி பத்து வயதினையடைவதற்குள் அரசனுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன. அவர்களில் முதலிற் பிறந்த வன் ஹைமவதிக்கு ஆறு வயது இளையவன். அப்பால் பிறந்தவன் ஹைமவதிக்கு எட்டுவயது சின்ன வன். ஆகவே இவ்விரு ஆண் பிள்ளைகளுக்கும் ஏற் பட்ட வித்தியாசம் இரண்டு வருஷமேயாம். மூத்தவ னுக்கு அரசன் மதிபாலன் என்றும் இளையவனுக்கு

நீதிபாலன் எனவும் திருப்பெயர் புனைந்து அருமையாக வளர்த்து வந்தான்.

இப்படி இவர்களிருந்து வருகையில் இவர்களைப் பெற்ற உத்தமியாகிய அரசன் மனைவி காலமாயினாள். இந்த விசனத்திலாழ்ந்த அரசன் இராஜ்யத்திலொன்றையுங் கவனியாமல் பித்தம் பிடித்தவன்போலிருந்தான். இவனுக்கு வீட்டில் எல்லாமிருந்தபோதிலும் ஒன்றுமில்லாததுபோலவே காணப்பட்டது! பாழே மடக்கொடி யில்லாமனை! இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை—என்னும் முதுமொழிகள் வீணோ?

இவ்வாறிருக்கும் அரசனுடைய நிலையைக் கவனித்த அமைச்சர்களும் பெரியாரும் அவனுக்கு ஓர் அரசகுலத்துப் பெண்ணை மணஞ்செய்வித்தனர். அப்பெண் நல்ல ரூபவதியா யிருந்தாளாகையினால் எல்லோரும் அரசனுக்கேற்ற மனைவிவாய்த்தனள் என்றும் நல்லாருக்கு எல்லாம் இனிமையாகவே அமையும் என்றும் பேசிக்கொண்டனர். அரசனும் அதுகேட்டு மகிழ்ச்சியடைந்தனன். ஆனால் அவனுள்ளத்தில் "மூத்தவளுடைய குழந்தைகளைத் தன் குழந்தைகளைப்போல் எண்ணிவளர்க்கும் கருணை இந்தப்பெண்ணுக்கு ஏற்பட வேண்டுமே" என்னும் கவலையும் சந்திரனிடம் களங்க மிருப்பதுபோ லிருந்து வந்தது.

இப்படி யிருக்கையில் ஒருநாள் மாலைவேளையில் அரண்மனையின் பின்புறமிருந்த நந்தவனத்திலே விளையாடிக்கொண் டிருந்த மதிபாலன் நீதிபாலன்

என்னும் இருகுழந்தைகளையும் எங்கேயோ காணு மென்கிற பேச்சு அரசன் செவிக்கெட்டியது. அத ஞல் புவநேந்திரன் வியப்பும் விசனமும் மேலிட்டவ ஞய் உடனே நாலாபக்கங்களிலும் ஆட்களைவிட்டுத் தேடும்படி கட்டளையிட்டான். ஆட்கள் எங்குமோ டித்தேடினர்; கடைசியில் எல்லோரும், காணும் எங்கேயும்! இனித்தேடுவதிலே பயனில்லை—என்று சொல்லிக்கொண்டே வந்து சேர்ந்தனர். இப்பேச்சு அரசனை எரிக்கும் துக்கமாகிய தீய்க்கு நெய்வார்த்த துபோ லிருந்தது; ஆனல் அரசனுடைய மனைவிக்கு மகிழ்ச்சியைத் தந்தது. மூத்தவளுடைய பிள்ளை வாழவேண்டு மென்கிற எண்ணமுடைய இளையவளு மிருப்பளோ உலகத்தில்? இதனைப் புவநேந்திரன் குறிப்பினலே தெரிந்துகொண்டானெனினும் "இது உலக இயற்கை; இதைப்பற்றிச் சிந்திப்பது துய ரத்தை இன்னும் விலைக்கு வாங்கிக் கொள்வதுபோ லாகும்" என்றெண்ணி மறந்தனன். பிறகு சிலநாட் கள் வரையில் அரசனுடைய சித்தம் ஒரு நிலையிலில்லா திருந்தது; அப்பால் ஒருவாறு மாறிற்று. இருப்பி னும் "புத்திரசோகம் நிரந்தரம்" என்பதுபோல் அரச னுடைய உள்ளத்திலே அத்துயரம் வேரூன்றியபடி யினலே, சிலசமயம் அவன் அக்குழந்தைகளின் விளையாட்டையும் மழலைமொழிகளையும் நினைக்கும் போது படாதபாடுபடுவான். என்னசெய்வானிவன்? இராஜாதிராஜனு யிருந்த தசரத சக்ரவர்த்தி ஸ்ரீராம னைப்பிரிந்த மாத்திரத்தி லேற்பட்ட துக்கத்தினலே உயிர் துறந்தானென்னும் கதை கேட்டதில்லையா?—

தசரதனிலும் புவேநேந்திரனை நாம் திடசாலியென்றே கொள்ளவேண்டும். தசரதன் தன் புதல்வன் காட்டுக்கேகினன் என்பது கேட்டுப் பொறுமல் உயிர் துறந்திருக்கின்றான். இவன், பிள்ளைகள் இந்த இடம்போனார்களென்பதையே உணரப்பெருதவனு யிருந்தும் உயிர் விடாமலிருக்கிரு னல்லவா? புத்திர சோகம் நிரந்தரமானதா யிருப்பினும் அதனை இது உலக இயற்கையென்று ஒதுக்கவேண்டும்! இன்றேல் தசரதன் அடைந்ததுபோல் துயரமும் ஆபத்தும் அடைய நேருமென்றறிக.

---

## அத்தியாயம்—2

ஹைமவதிக்கு இப்பொழுது வயது பதினறு. இவள் நல்ல புத்திசாலி; தன் அடக்கமுடையவள்; அழகிலும் குணத்திலும் சிறந்தவளென்னும் புகழ் படைத்தவள். அவளுக்குப் புவநேந்திரன் போதுமான கல்வயறிவைக் கொடுத்திருந்தது மன்றி ஒரு பெண் தன் புருஷனுடைய வீட்டிலும் புருஷனிடத்திலும் நடந்து கொள்ள வேண்டியவைகளனைத்தையும் நன்குபோதித்து ஒரு தந்தை தன் மகளுக்கு விவாகமாகு முன்னர்ச் செய்யக் கடமைப்பட்டவைகளையெல்லாம் செய்து அவளுடைய திருமணத்தை முடிப்பதிலே சிந்தையுடையவனு யிருந்தான்.

தன்னுடைய சகோதரர்களை யிழந்த துக்கமும் தாயை யிழந்த துக்கமும் ஹைமவதியை அடிக்கடி பாதித்த போதிலும் அவள் தன் மனே

தைர்யத்தினாலே அவைகளை ஜயித்துவந்தாள்; மாற்றான் தாயினிடம் தான் தன் அன்னையினிடம் செலுத்தக் கடமைப்பட்ட அன்பும் மரியாதையும் செலுத்தி வந்தாள். இருப்பினும் மாற்றான் தாய் அந்தப் பதவிக்குரிய குணங்களைக் காட்டாமலிருக்கவில்லை. அதனை ஹைமவதி நன்குணர்ந்தும் அவளுடைய தந்தையைப்போலவே இது உலக இயற்கையென்றெண்ணிப் பொருட்படுத்தாமல் தன் பொறுமையினாலே தன்னைக் காத்துக்கொண்டு வந்தாள். தக்கது இன்னது தகாதது இன்னது என்றறிவிக்கும் கல்விச் செல்வம் ஹைமவதியினிடம் நிறைந்திருக்கின்றதன்றோ? இவள் தன் சிற்றன்னையின் மனத்திற்கு விரோதமான ஒரு சிறு செய்கை செய்யவும் அஞ்சுவாள். ஏன் தெரியுமா? அதனால் தன் தந்தையின் மனத்திற்கு ஏதேனும் வருத்தம் உண்டாகுமோ என்னும் அச்சம் அவளுடைய நெஞ்சிலே முன்னின்று தடுக்கும். புத்திசாலியான பிள்ளைகள் தங்களை யீன்றவர்களின் மனம் வருந்த நடப்பார்களா? அன்றியும் தன் சிற்றன்னை தன் தந்தையின் அன்பிற்கு ஓரிருப்பிடமாய் விளங்குபவள் என்பது அவளுக்குத் தெரியுமல்லவா? உலகியலுணரும் அறிவு கைவரப் பெற்றவளல்லவா ஹைமவதி? இவள் தன்னுடைய மதியூகத்தினாலேயே எதையும் ஒரு முறை கண்ட அளவிலே கற்றுக்கொண்டு தன் தந்தையே யன்றி மற்றும் யாவரும் தன்னை மெச்சும்படி விளங்கினாள்.

இப்பொழுது ஹைமவதியின் சிற்றன்னை "இந்த ஹைமவதி நல்ல ரூபவதி; நல்ல குணமுடையவள்;

இவளை என் தம்பிக்கு மணஞ்செய்து வைக்க நான் முயற்சி செய்தாலன்றி இவ் வரசுரிமையை இழக்க நேரிடும். மூத்தவளுடைய பிள்ளைகளையும் காணோம். எனக்கும் பிள்ளையில்லை. ஆகையால் இவ்வரசு ஹைமவதிக்குரியதாய் அவளை எவன் மணஞ்செய்கின்றானோ அவன் ஆட்சி புரிய நேரிடும். ஆதலால் நானிப்படிச் செய்வேனாயின் அரசு புரியும்பெருமை என் சகோதரனுடையதாகும். நானும் என் பெருமை கெடாமல் வாழ்வேன்! இதனை அரசருக்கு வேறு விதமாய்ச் சொல்லிக் காரிய சித்திபெறவேண்டும்''-என்று கருதி அக்காரியத்தை முடிப்பதிலே கவனமாயிருந்தாள்.

இவளெண்ண மிவ்வா றிருக்கட்டும். ஹைமவதியின் எண்ணத்தைக் கவனிப்போம். அவளுக்கு வயது பதினாறாகையினாலே அவளுடைய மனது தன்னுடைய பக்குவத்திற்குத் தக்கபடி சிந்திக்கத் தொடங்கியபடியால், அவள், தன் தந்தையின் அரண்மனையிலே வளர்ந்துவரும் சந்திரசூடன் என்பவனைத் தான் எப்பாடுப் பட்டேனும் மணந்து கொள்வதென நிச்சயித்தாள்.

சந்திரசூடன் ஒரு சிற்றரசனுடைய புதல்வன், சிறுவயதிலே தன் தாய் தந்தையரை யிழந்து இவ் வரண்மனையை வந்தடைந்த அநாதை! இவனுக்குப் புவநேந்திரன் அரசர்க்குரிய கல்வியைக் கொடுத்திருக்கின்றான். அவனும் ஹைமவதியும் ஒரு சாலை மாணவர்கள். இருவரும் ஒருவர் மனதை யொருவர் நன்றாயறிந்தவர்கள். சந்திரசூடன் அநாதையேயெனினும் நல்ல அழகுடையவன்; குணங்களெல்

லாம் நிறைந்தவன். பெரியவர்க்கடங்கி நடக்கும் உத்தமன்; நிகரற்ற வீரன். கம்பீரமான தோற்றமும் கண்டவர் அஞ்சும் ஆற்றலுமுடையவன். இவனிடத்தில் அரசனுக்கு நல்ல அன்புண்டு. அரசன் இவன் அநாதை யென்பதைக் கருதி இவனை ஆதரித்துவந்தான். இவனுக்கு இப்பொழுது வயது இருபத்தைந்துக்குமே லிருக்கும். இவனிடம் ஹைமவதி மனத்தைச் செலுத்தி யிருப்பதை அரசனறியான். ஆனால் அவன் மனைவி மாத்திரம் ஹைமவதிக்கும் சந்திர சூடனுக்கும் உள்ள நேயத்தைக் கொஞ்சம் அறிந்திருந்தாள்.

இவ்வா றிருக்கையில், ஒருநாள் அரசன் தன்னருகே ஹைமவதியும் மனைவியும் இருக்கும்போது தன் மனைவியை நோக்கி, "தக்க வரனைத்தேடி, இவ்வருஷத்திலேயே ஹைமவதியின் திருமணத்தை முடித்து விடவேண்டும்! ஈசன் திருவருள் எப்படி யிருக்குமோ?" என்று கூறினன். ராணி, "எங்கே போய் வரன் தேடப்போகின்றீர்கள்? உங்கள் மைத்துனன் சிங்கார பூபன் கிடைத்தால் போதாதா?" என்றாள்! அரசன் கேட்டு, "ஆம் மறந்தேபோய் விட்டேன்! கொள்ளலாம்! இருப்பினும் நாம் நமது முயற்சியைத் தளரவிடக்கூடாதன்றோ?" என்றான். இப்பொழுது ஹைமவதியின் முகம் மாறியது. இதை யரசன் கவனித்தானதலின் தன் மகளின் எண்ணம் வேறு என்பதுணர்ந்து கொண்டான். அப்பால் ஹைமவதி ஒன்றும் பேசாமல் அவ்விடம்விட்டுப் போய்விட்டாள்; பிறகு கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அங்கு வந்தாள்.

அரசன், ஹைமவதியை அருகிலழைத்து, "நீ சிங்கார
பூபனை விவாகஞ்செய்து கொள்கின்ருயா? உன்
விருப்பமென்ன?" என்று கேட்டான். ஹைமவதி
ஒன்றும் பேசாமல் தான் முன்னரே எழுதிக் கையில்
வைத்துக்கொண்டிருந்த ஒரு சிறு கடிதத்தை எடுத்து
அரசன் முன்பு வைத்து வாய் பேசாமல் நின்ருள்.
அரசன் பிரித்துப் படித்தான். அதில், "நான் சந்திர
சூடனை மணந்துகொள்ள விரும்புகின்றேன்! அவன்
ஏழை என்பதை நீரும் அறிவீர்! நானும் அறிவேன்!
அவனுடைய அரிய குணங்களையும் புத்திசாலித்தனத்
தையும் நாமிருவரும் நன்ருயறிவோம். அவன் ராஜ
குலத்தைச் சார்ந்தவனென்பதையும் தாமறிவீர்!—
ஆகையால் முன் ஸாவித்திரி, தான் வரந்தேடச்
சென்று காட்டிலே அலைந்த ஒரு முனிவரின் புதல்
வனை அவன் குணமும் இலக்ஷணமும் கண்டு விரும்பி
மனஞ்செலுத்தியதுபோல் இவனை நான் விரும்பியுள்
ளேன். நல்ல குணத்திற்கும் நல்ல அறிவிற்கு முன்னே
ஐசுவர்யம் நிற்குமா?—உயர்ந்த குணமுடைய பிதா
வே! இந்த என் எண்ணத்தை முடித்துவைத்துத்
தாங்கள் செய்யவேண்டிய கடமையைச் செய்தவரா
தல் வேண்டும்"—என்று எழுதியிருந்தது.

வேந்தன் இதைப் படித்துப் பார்த்ததும், தனக்
குள், "இவள் மதி சிறந்தது. ஸாவித்திரியை உபமா
னங் காட்டிவிட்டாள். இவளுடைய தீர்மானத்திற்கு
வேறு பேச வழியைக் காணேம். இருப்பினும் உலக
மதிக்கத்தக்க ஐசுவரியமும் கௌரவமும் படைத்த
எனக்குப் பிறந்த புதல்வியை ஒருபரம ஏழைக்குக்

கொடுக்க நான் சம்மதியேன்!"— என்றெண்ணி, ஹைமவதியை யழைத்து, "ஹைமவதி, நீ என்ன நியாயம் கூறியபோதிலும் என் மனம் உன்னை ஒரு பரம ஏழைக்குக் கொடுக்க இணங்கவில்லை. என்னுடைய அந்தஸ்துக்குத் தக்க மருமகனை நானடைய வேண்டாமா?" என, ஹைமவதி அப்பொழுது மறுத்துப் பேசுவது தகுதியல்லவென்றெண்ணி, "தாம் கூறுவது நியாயமேயாம்! இருப்பினும் என்மனம் விரும்பியவரானிடம் ஏழை யென்னும் ஒரு குறையை யன்றி வேறு குறை இல்லை யல்லவா? இதையும் தாங்கள் சிந்தித்துப் பார்த்துத் தீர்மானியுங்கள்" என்று கூறி அவ்விடம் விட்டுச் சென்றாள். அரசனும் ஒரு வித முடிவை யடையாமல் அங்கிருந்தகன்றான்.

---

## அத்தியாயம்—3

இவ்வாறாகவே அரசனுடைய மனம் பேதிக்குமாறு அவனுடைய மனைவி போதித்தாள். இளையாளுடைய போதனைக்கு இணங்காதவனுமிருப்பானா? மதிமான்களும் மயங்கி மூத்தவளுக்குப் பிறந்த மக்களைக் கொலை செய்வதையும் அடித்துத்துரத்துவதையும் நாம் பார்க்கின்றோமன்றோ?—

அரசன் அவள் போதனைக்குட்படவே சந்திரசூடன்பேரில் பெரிய கோபங்கொண்டான்; அவனை எப்படி நகரத்தைவிட்டுத் துரத்துவதென்று ஆலோசனை செய்தான். அரசன் அவனைத்தன் பிள்ளையைப் போல் வளர்த்திருக்கின்றா னல்லவா? அவ்வெண்

ணத்தை நிறைவேற்ற அவனுக்குக் கொஞ்சத்தில் மனம் வரவில்லை. கடைசியில் மனைவியின் துர்ப்போதனை அவனைப்பிடித்துந்தியபடியால், அவன் ஒருநாள் சந்திரசூடனை யழைத்து, "நீ இந்நகரத்தை விட்டே ஓடிவிடு. மூன்றுநாளிங்கிருக்கலாம். நான்காவதுநாள் நான் உன்னை இங்கே பார்ப்பேனாயின் நீ சிரச்சேதஞ் செய்யப்படுவாய்!" என்று உத்தரவிட்டான்.

இதைக் கேட்ட சந்திரசூடன் இடிமுழக்கங் கேட்ட அரவம்போலானான்; மனம் நடுங்கினான்; "இதுவும் என்னுடைய விதிபோலும்" என்று வியந்தான். யாரிடத்திலே போய் முறையிடுவான். தாய்தந்தை தெய்வம் எல்லாமாயிருந்தவன் அரசனல்லவா? அரசனும் இப்படியானபின், சந்திரசூடன் எல்லார்க்கும் மேலான இறைவன் ஒருவனுண்டு என்பதையும் அவன் புகல் புகுந்தார்க்கே உய்யும் வழியுண்டென்றும் அவனே எல்லாமறிந்து தக்கவாறு செய்பவனென்றும் கண்டுணர்ந்து அவனைத் தியானித்து அவனைச் சரண் புகுந்தான். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது முதுமொழி யல்லவா?

இனிச் சந்திரசூடன் கதியும் அவனுக்கும் ஹைமவதிக்குமிருந்த நேயமும் எவ்வாறு முடிகின்றதென்று கவனிப்போம்.—

சந்திரசூடன் அரசனுடைய ஆஞ்ஞை கேட்ட மாத்திரத்தில் கடவுளிடத்திலே தன்னை ஒப்புவித்துத் தான் மச்சநாட்டுக்குப்போகத் தீர்மானித்தான். மச்சநாடு நல்ல நீர்வளமும் நிலவளமுமுடையவொரு திருநாடு. அந்த நாட்டுக்குரிய வேந்தனும் நல்லவன்!

அவன் குடிகளைத் தன் மக்களைப்போல் பாவிக்கு மியல்பினன். குடிகளும் தங்களிறைவனைக் கடவுள் போல் பாவித்துக் கீழ்ப்படிந்து நடக்கும் நற்குண முடையவர்கள். இவைகளையெல்லாம் சந்திரசூடன் முன்னரே கேள்விப் பட்டிருக்கின்றுனாதலால், பாண்டவர்கள் அஞ்ஞாத வாசத்தில் மறைந்து கடத் தவேண்டிய காலத்தைக் கடத்த, விதர்ப்பநாட்டை விரும்பியது போல் மச்சநாட்டை விரும்பினான்.

இவ்வாறு தீர்மானித்தவுடன் தன்னைத் தன் னுயிர்போல்நேசிக்கும் ஹைமவதியைக் கண்டு பேசச் சமயம் எப்பொழுது வாய்க்குமென்று அவன் எதிர்ப் பார்த்துக் கொண்டிருந்தான். இதற்குமுன் ஒரு நாளில் பலமுறை ஹைமவதியும் சந்திரசூடனும் சந் தித்துப் பேசுவதுண்டு. இவ்வுத்தரவு பிறப்பித்த வுடன், ஹைமவதியைச் சந்திரசூடன சந்திக்கமுடியா தபடி ராணி பல சூழ்ச்சிகளைச்செய்துகொண்டு தன் எண்ணத்தை நிறைவேற்றப்பார்த்தாளாதலினால்மூன் ருவது நாள் சூரியன் அஸ்தமிக்கும் வரையில் சந்திர சூடனுக்கு அவளுடைய சந்திப்பு கிடைக்கவில்லை. என்ன செய்வான். நெஞ்சம் புண்ணாக வருந்தினான். அவனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. நேசத்தினா லேற்பட்ட பாச பந்தத்தின் வன்மையை அவன் உணர்ந்தான்; அதனைக் கடப்ப தரிதெனக் கண் டான்; இப்படியும் ஒரு பிறவி யேற்படவேண்டுமா உலகில் என்று தன்னை வெறுத்துக் கொண்டான்!

இவன்கதி இப்படியிருந்ததெனில் ஹைமவதி யைப்பற்றி நாமெப்படி எழுதித் தெரிவித்தல்கூடும்!

அவளையும் நேசம் என்கிறபாசம் கட்டுப்படுத்தியிருக்கின்றதன்றோ? அவள் உள்ளம் தன் தந்தையின் கட்டளையைக் கேட்டதும் சிதைந்தது. நெட்டுயிர்ப்பெறிந்து வெட்டுண்ட மரம்போல் தானிருந்த தனியறையிலே அவள் விழுந்தாள்! வெகுநேரம் கிடந்து கண்ணீர்விட்டுத் தனக்குள்ளேயே விம்மி விம்மி யழுதாள்; பிறகு எழுந்திருந்து, "மூடமதிபடைத்த நான் ஏன் அழுகின்றேன்—இந்த வரனை யன்றி வேறுவரனை மணப்பதில்லையென மறுத்துவிடுகின்றேன். இதனால் எனக்கு என்ன ஆஞ்ஞை நேரிடினும் நேரிடுக"—என்று எண்ணித் தீர்மானித்துக்கொண்டு தன் அறையிலிருந்து வெளியேவந்து இவளும் அவனைச்சந்திக்கும் சமயத்தை நாடியவளாயிருந்தாள்; தனக்கு அப்படி யொருசமயம் வாய்க்காத வழிகளிலெல்லாம் தன் சிற்றன்னை தன்னைச் செலுத்துவதையுந் தெரிந்துகொண்டாள். தெரிந்துகொண்டவளவில் தன் எண்ணம் நிறைவேறத்தக்க உபாயங்களிலே மனத்தைச் செலுத்திக்கொண்டிருந்து மூன்றுவது நாள் மாலை சூரியாஸ்தமனமான கொஞ்சநேரத்திற் கெல்லாம் ஒருவர்க்குந் தெரியாமல் சந்திரசூடனிடம் வந்து அவனைச்சந்தித்தாள். சந்திரசூடன் அவளைக்கண்டதும் ஒன்றும் பேசாமல் கண்ணீருகுத்து வருந்தினன். இச்சமயத்திலே நாம் நமது தைர்யத்தை யிழப்பது கூடாதென உணர்ந்த ஹைமவதி, "இதற்கேன் வருந்தவேண்டும்? தாங்களெங்கிருப்பினும் தங்களை யடையும்படியான வழியை நான் தேடிக்கொள்கின்றேன். அஞ்சவேண்டாம்!

தங்களை நான் தங்களுடைய நிழல்போல் என்றும் அநுஸரிப்பேன்! கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே யுதித்தாலும் மலையினுச்சியிலே தாமரைபூத்தாலும் என் சித்தம் தான் இன்றுகொண்ட தீர்மானத்தை என்றும் மறவாது. இது ஸத்தியமான பேச்சு! தாம் அரசருடைய ஆஞ்ஞைப்படி இந்நகரத்தைவிட்டுச் செல்லுங்கள். ஆனால் என்னைமட்டும் மறவாதிருங்கள்! நற்காலம்வரும். வந்ததும் நதி கடலிலே கலப்பதுபோல் சேர்க்கை யேற்படும். நான் என்னைத் தாம் மறவாதிருப்பதற்கு அடையாளமாக இந்த என் கைவிரல் மோதிரத்தைக் கொடுக்கின்றேன். இதனை வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறித் தன் மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தாள். அவன் அதை "ஆ! என் உயிரே!" என்று கூறிப் பெற்றுக்கொண்டு கண்ணீரினாலே அதனைக் குளிப்பாட்டிக் கைவிரலிலணிந்துகொண்டு, "ஹைமவதி, உன்னை மறவேன்! மறவேன்! நாம் கொண்ட நேயம் என்றுங் குறைவுறாதிருக்கப் பரமகாருண்ய மூர்த்தியாகிய முருகப்பெருமான் திருவருள் புரியட்டும்! என் கண்ணே என்னை மறவாதிருப்பதற்குரிய அடையாளமாக என்னுடைய இம்மோதிரத்தை நான் தருகின்றேன். நீ இதை உன்விரலி லணிந்து கொண்டு என்றும் என்னை மறவாதிருக்கக்கடவாய்! மச்சநாடு செல்கிறேன். நீ வருந்தாதே!" என்று கூற இருவரும் பிரியமாட்டாமற் பிரிந்தார்கள்.

## அத்தியாயம்—4

மறுநாள் பொழுது புலர்ந்தது. சந்திரசூடன் அரசனாலே தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டானென்ற செய்தி நகரமெங்கும், தேகத்தில் விஷம் பரவுவது போல் பரவிவிட்டது. அதற்குரிய காரணமும் அவ்வாறே பரவியது! நகரத்தில் சிலர் இது இளையாளின் மோகத்தினாலே வந்ததென்று கூறிக்கொண்டனர். சிலர் ஹைமவதி அரசனுடைய எண்ணத்திற்கு மாறுபட்டதனாலே வந்ததென்று கூறிக்கொண்டனர். எப்படி யிருப்பினும் நிரபராதியைத் தேசப்பிரஷ்டம் செய்வது அரசநீதி யாகாதென்று சிலர் கூறிக்கொண்டனர். உயிர்போல் நேசித்தவர்களைப் பிரிக்க மனத்துணிவுகொண்ட கொடுமை பெரிது! பெரிது! என்று பலர் கூறிக்கொண்டனர்.

இப்படி நகரம் பேசிக்கொள்வது அரசனுடைய செவிக்கு மெட்டியது. அரசன் என்ன செய்வான்! வருந்தினான்; ஏழையென்னும் ஒரு காரணங்கொண்டு மகள் நேசித்த உத்தமனைத் தேசப்பிரஷ்டம் செய்தது தவறென்பதைக்கண்டான். "அவனைச் சீமானுக்கவும் அரசனுக்கவும் என்னால் முடியாதா? இதனைச் சிந்தியாமற் போனேனே! ஸ்திரீகளுக்கு இடங்கொடுப்பது கூடாது என்பதை மறந்தேனே! அதிலும் இளையாளாகவந்தவள் மூத்தவள் வயிற்றுப்பெண்ணுக்கு இதந் தேடுவாளா? நிதானபுத்தியுடைய நானே மயங்கிவிட்டேனே! இருக்கட்டும். ஹைமவதிக்கு ஏற்ற நல்ல வரனைத்தேடி மணஞ் செய்விக்கின்றேன் எப்படியும்" என்று தீர்மானித்தான்.

ஹைமவதி, சந்திரசூடன் தன்னைப்பிரிந்த மறு நிமிஷமுதல் ஈரப்பசையற்ற இளங்கொடிபோலவும் மணம் நீங்கிய மலர்போலவுமானாள். அவள் மனத்திலே துயரம் வற்றாத கிணற்றின் ஊற்றுப்போல் மேன்மேலுமெழுந்து கண்வழியே நீராகப்பெருகத் தொடங்கியது. என்னசெய்வாள்! யாரிடஞ்சொல்வாள்! இவளும் தெய்வத்தினிடமே கூறுவாளாயினள். தெய்வமுண்டு என்னும் ஆஸ்திக புத்தியுடையவர்கள் ஆபத்திலும் சம்பத்திலும் கடவுளையன்றி வேறெவரை நினைப்பார்கள்?—

இனிச் சந்திரசூடனைக் கவனிப்போம். சந்திரசூடன் மச்சநாட்டிற்குப் போய்ச்சேர்ந்த கொஞ்சநாட்களுக்குள் சில நண்பர்களைத் தேடிக்கொண்டான். நல்ல குணமுடைவர்களும் தெய்வபக்தியுடையவர்களும் எங்கிருந்தாலென்ன? அவர்களுக்குச் சென்றவிடமெல்லாம் சொந்த இடம்போலத்தானே இருக்கும்? எல்லோரும் விரும்புவார்களன்றோ அவர்களை? அப்படிச்சேர்ந்த நண்பர்களுடன் சந்திரசூடன் ஒருநாள் மாலைப்பொழுதிலே ஒரு நதிக்கரையின்மீது நின்று சம்பாஷித்துக்கொண் டிருந்தான்! அப்பொழுது பலதேசத்துப் பெண்களைப் பற்றிய பேச்சு உண்டாயிற்று. ஒவ்வொருவரும் தத்தம் தேசத்துப் பெண்களைப்பற்றிப் பேசியது மன்றி அவரவர் மனைவியைப்பற்றியும் புகழ்ந்து பேசிக்கொண்டார்கள். இவர்கள், ஒருவன் தன் மனைவியினுடைய நற்குணங்களைப் பலரறியச் சொல்லக்கூடாதென்னும் பெரியவர் உபதேசத்தை யுணராதவர்கள்.

சந்திரசூடன் இந்த நியாயத்தை நன்குணர்வான். உணர்வானெனினும் அவர்கள் பேசும்போது இவன் சும்மாவிருக்கப் பொறுமையில்லாதவனுனன். ஆகையினுல் இவனும் தன் மனைவி ஹைமவதியைப்பற்றிப் பேசத்தொடங்கி அவளுடைய உயர்ந்த குணத்தையும் அறிவையும் கற்பின் வன்மையையும் புகழ்ந்து பேசினுன். இப்படிப் பேசியவர்களிலே, பிரதாபன் என்னும் ஒருவன் முன்வந்துநின்று வெகு கோபத்துடன் "எங்கள் தேசத்துப் பெண்களைவிட அவ்வளவுயர்ந்த குணமுடையவர்களா உன் மனைவி? இதை நான் நம்பவில்லை" என்றுன். சந்திரசூடன் "என்ன அப்படிச் சொல்கின்றுய்? இந்த விஷயத்தில் நீ சிறிதும் சந்தேகிக்க வேண்டாம்" என, பிரதாபன் "அப்படியாயின் நான் சென்று உன் மனைவியைப் பரிசோதித்து வருகின்றேன்" என்றுன். சந்திரசூடன் "சரி அப்படியே செய்யலாம். நீ சென்று அவ் வனிதையைக் கண்டுபேசி அவளன்பைப் பெற்றதற்கடையாளமாக நான் அவளுக்குக் கொடுத்திருக்கும் என் கை மோதிரத்தை வாங்கி வரவேண்டும். இன்றேல் நீ எனக்குப் பெருந்தொகை தரவேண்டும். இதோ இதனைப் பலரறியச் சொல்லுகின்றேன்" என்றுன் பிரதாபன், "அவ்வாறே கொண்டு வருகின்றேன். எனக்கு வசப்படாத ஸ்திரீகளுமுண்டா? அவ்வாறு செய்யாவிட்டால் என்பெயரை மாற்றியழை" என்று சொல்லிவிட்டுச் சென்றுன். எல்லோரும் இப்படியும் ஒரு மூடன் பந்தியம் போடுவானு என்று சந்திரசூடனைத் திட்டிக்கொண்டு வியப்படைந்தார்கள்.

உண்மையிலே இதைக்கேட்டவர்களெல்லாரும் அப் படித்தானே கூறுவார்கள்? இம்மாதிரியேன் சந்திர சூடன் பேசினான்? அவனுக்கு அவன் மனைவி ஹைம வதியினிடம் இருந்த நல்ல நம்பிக்கை இவ்வாறு பேசத் தூண்டியது.

பிரதாபன் புறப்பட்ட ஒரு வாரத்திற்கெல் லாம் இந்திரபுரிக்குவந்து சேர்ந்தான்; இங்கொரு தெருவில் வீடு ஒன்று அமர்த்திக்கொண்டு அதிலி ருந்து வந்தான். இந்தத் தெருவிற்கும் அரண்மனைக் கும் வெகு சமீபம். இவன் அடிக்கடி அரண்மனைக்குப் போவதும் வருவதுமா யிருந்து அங்குள்ள வேலை யாட்களுடன் நட்புச்செய்துகொண்டு, அவர்களிடம் தான் மச்சநாட்டினன் என்றும் சந்திரசூடனுக்கு நண்பனெனவும் அவனால் அனுப்பப்பட்டவனென் றும் அவனுடைய மனைவி ஹைமவதியைக்கண்டு பேசவேண்டுமென்றும் கூறி அதற்குச் சமயமெப் படிக் கிடைக்குமெனக் கேட்டான். அவ்வேலையாட் களிலொருவன் தான் ஹைமவதிக்குச் சொல்லிச் சமயந்தெரிந்து சொல்வதாக ஒப்புக்கொண்டு மறு நாள் வரும்படி சொல்லியனுப்பிவிட்டு ஹைமவதியி னிடம்போய், "அம்மணி, சந்திரசூடனுடைய நண பர் ஒருவர் வந்திருக்கின்றார்; தம்மைப்பார்க்கப் பிரியப்படுகின்றார். நாளையதினம் வரச்சொல்லி யிருக் கின்றேன்; வருவார்; வந்தால் அழைத்து வரட்டுமா?" என்று கேட்டான். ஹைமவதி, "அட முட்டாள்! ஏன் நாளைக்கு வரும்படி சொல்லி யனுப்பினாய்? இப் பொழுதே அழைத்து வரப்படாதா?" எனச்சினந்து

கொண்டாள். வேலையாள், "அம்மணி, சமயந் தெரிந்துகொண்டு பின்பு அழைத்துவரவெண்ணி நான் அனுப்பிவிட்டேன்" என்றான். ஹைமவதி, "இதற்கெல்லாம் சமயமா? என் நாயகனுக்கு நண்பரென்றால், என்னைக் கேளாமலே நீ அழைத்துவந் திருக்கலாமே! இது தெரியவேண்டாமா? எனக்கு அவரைப் பார்ப்பதிலே வெறுப்பிருக்குமா? போ— நாளையதினமேனும் அவர் வந்ததும் ஒருவர்க்குந் தெரியாமல் அழைத்து வா; போ" என்று கூறி யனுப்பிவிட்டு அந்த நிமிஷமுதல் தன் நாயகனுடைய நண்பன் எப்பொழுது வருவானென்கிற எண்ணத் துடனிருந்து ஒரு நாழிகை யாயிற்று இரண்டு நாழி கையாயிற்று என்று நாழிகைக் கணக்கெண்ணிக் கொண்டுவந்தாள். அந்தோ! தன்னைவிட்டுப் பிரிந்த தன் அன்பனுக்கு நண்பனது வருகையை யல்லவா எதிர்பார்க்கின்றாள்! ஏதேனும் உற்ற செய்தி சொல்லியனுப்பி யிருக்கக்கூடுமென்று எண்ணி யிருப் பாளல்லவா?

இப்படி யிருக்கையில் மறுநாள் பகல் வேளையில் பிரதாபன் அரண்மனை வந்து சேர்ந்தான். அரண் மனை வேலைக்காரன் அவனை வரவேற்கச் சித்தமா யிருந்தானுதலால், அவன் வந்ததும் முக மலர்ச்சி யுடன் வரவேற்று, அவனுக்கு அரண்மனையிலே ஹைமவதி யிருக்கும் அறைக்கு வழிகாட்டி அவளி டம் அழைத்துக்கொண்டு போய்விட்டுத் திரும்பி னான். அவ் வேலைக்காரனுக்குப் பிரதாபன் இரண்டு பொன்மோகராவைக் கொடுத்துச் சந்தோஷப்படுத்தி

ளுன். பிரதாபன் வேலைக்காரனுக்குப் பணங் கொடுத்தபோது தன்னுடைய அச்செய்கை ஹைமவதிக்குத் தெரியாமலிருக்க வேண்டுமென அஞ்சினுன். வேலைக்காரனும் அந்த வெகுமதியை வெகு தந்திரமாகப் பெற்றுக்கொண்டு போனுன். பணம் பல செய்யுமென்பது பழமொழி யல்லவா ?—

இவ்வாறு பிரதாபன் பிரவேசித்ததும் அவனை வரவேற்க ஆவலுடன் காத்திருந்த ஹைமவதி, முன் வந்து, "வரவேண்டும் வரவேண்டும்" என்று வெகு பணிவோடு அழைத்து ஆசனத்திலே வீற்றிருக்க வேண்டி, அவன் அமர்ந்ததும் தானும் ஓர் ஆசனத்திலமர்ந்து, தன் நாயகனின் திருநாமம் கூறிவந்த ஹநுமானைக்கண்ட ஸீதையைப்போல் உள்ளமுவந்து அவள் தன் நாயகனின் க்ஷேமம் விசாரித்ததுபோல் க்ஷேமம் விசாரித்து, அவள் "நீங்கள் எப்படி என் நாயகனுக் குற்றவரானீர்கள்?" என்று வினவி யறிந்ததுபோல் இவளும், "ஐயா! தாமெப்படி என் நாயகனுக்கு நண்பரானீர்" என்று வினவி யறிந்து மனச் சமாதானமடைந்து, சற்றுப் பேசிக்கொண்டிருக்கையில், பிரதாபன் தன் கெட்ட எண்ணஞ் சிறிது வெளிப்பட மெதுவாய்ப் பேச்சை வெளியிட்டான். ஹைமவதி கேட்டதும், "ஆ! இவனை இங்கு வர விட்டது முதற் பிழை! அன்றி இவனுடன் நாம் தனித்துப் பேசத் துணிந்தது இரண்டாவது பிழை! உலகத்திலே நல்லவர்கள் இல்லையென்று தான் கூற வேண்டும்! அப்படி எவரேனும் இருப்பின் அவர் இப்படிப்பட்ட என்போன்ற பாவியிடம் நல்லது

சொல்ல வரும்படியான பாக்ய மேற்படுமா?" என்று எண்ணிச் சினங்கொண்டு, "நல்லது நவின்றாய்? உன் மீது குற்றமில்லை. நான் அறிவிலி. ஸீதாதேவி ஸந்யாஸியென இராவணனை நம்பியதுபோ லுன்னை நான் நம்பினேன்! நீ யோக்யன்றான்! மரியாதையுடன் வெளியே செல்! இன்றேல் மானமிழந்து போவாய்!" என்று அச்சமின்றிக் கூறி வேறு ஓர் அறைக்குப் போய்விட்டாள். பிரதாபன், "ஓ! இவளிடம் இனிப் பேசுவதாகாது. இவளைத் தந்திரமாய் ஏமாற்றவேண்டும்! அதற்கேற்ற யுக்தி செய்துகொண்டு வருகின்றேன்" என்று எண்ணிக்கொண்டு விரைவிலே அங்கிருந்து எழுந்து ஒருவரையும் அறியாமல் வெளிப்பட்டுப் போய்விட்டான்.

ஹைமவதி சற்றுப்பொறுத்து அவ்விடம் வந்து பார்த்து, "இந்தமட்டும் நல்ல வேளையாய் ஒழிந்தான்! என்ன சொல்வேன் என் விதியிருந்த தன்மையை! விதியையும் வினையையுங்கூறிப் பயனென்ன? நானேன் இவனை உள்ளேவிட்டேன்?" முகமறியாத ஆடவனை உள்ளே அழைத்துத் தனித்திருந்து பேசத் துணிந்தது என் அறியாமைதானே! அவனென்ன செய்வான். நாயைக் கொண்டுவந்து ஹோமகுண்டத்தி னருகே வைத்திருந்தால் அது ஹவிஸை அபகரிக்கப் பாராமலிருக்குமா? இப்படிப்பட்ட செய்கை உலகத்திற்கு இயற்கைதானே!— இருக்கட்டும் — என் அன்பனைக் காணும்படியான காலமேனும் கிடைக்குமா? ஜகதீசா!" என்று எண்ணி

எண்ணிய நிமிஷமே அங்கிருந்த ஸோபாவில் சாய்ந்துவிட்டாள்.

அதற்கு அடுத்தநாள் பிரதாபன் அரண்மனை வேலைக்காரர்களைப் பணத்தினாலே தன் வசமாக்கிக் கொண்டான்; அவர்களிடம் தன்னை ஒரு பேழையிலே வைத்து மூடி, ஹைமவதியின் படுக்கை யறையிலே கொண்டுபோய் ஒருவரையும் அறியாமல் வைத்துவிடும்படி கேட்டுக்கொண்டான். பணத்திற்கு ஆசைப்பட்ட அவ் வேலைக்காரர்கள், இது பெருந் தவறு என்பதை யெண்ணாமல் பிரதாபனை ஒரு பேழையி லடக்கஞ்செய்து ஹைமவதியின் படுக்கை யறையிலே கொண்டுபோய் வைத்து விட்டார்கள். இப்பொழுது இராத்திரி ஹைமவதி படுக்கைக்கு வருந் தருணமாதலால், இவ்வாறு பேழை வைக்கப் பட்ட கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஹைமவதி வழக்கம்போல் படுக்கைக்கு வந்து தன்னுடைய அழகிய கட்டிலிலே படுத்தாள்; படுத்த கொஞ்சநேரத்திற் கெல்லாம் நித்திரை போய்விட்டாள். இவற்றைக் கவனித்துக்கொண்டிருந்த பிரதாபன் சமயம் பார்த்துப் பெட்டியை மெதுவாய்த் திறந்துகொண்டு வெளிப்பட்டு அவ்வறை முழுவதையும் செவ்வையாய்ப் பார்த்து அங்கிருந்தவைகளை யெல்லாம் மனத்திலே பதிய வைத்துக்கொண்டு பிறகு ஹைமவதியின் அருகே வந்து நின்று உற்று நோக்கினான். ஹைமவதியின் கழுத்திலிருந்த சிறு மச்சம் அவன் கண்ணுக்குப் புலப்பட்டது. அதையுங் கவனித்துக்கொண்டு "நல்ல அடையாளங் கண்டேன்" என்று சொல்லிய

வாறே மிக மகிழ்ச்சியுடன் ஹைமவதியின் திரு விரலிலணிந்திருந்த மோதிரத்தை வெகு ஜாக்ரதையாய்க் கழற்றி மடியிலே வைத்துக்கொண்டு மறுபடியும் பெட்டியிலேவந்து படுத்துக்கொண்டான். பிரதாபன் முன்னரே செய்திருந்த ஏற்பாட்டின்படி அரண்மனை வேலையாட்கள் சிறிது நேரத்திற்கெல்லாம் அங்கே வந்து அந்தப் பெட்டியை எடுத்துக்கொண்டு அரண்மனைக்கு வெளியேபோய்த் திறந்து விட்டார்கள். பிரதாபன் வெளிப்பட்டு அவர்கட்கு வெகு சந்தோஷத்துடன் வெகுமதி யளித்து அவர்களிடம் விடைகொண்டு சென்றான்.

---

## அத்தியாயம்—5

சந்திரசூடனுக்குத் தன்னை நேசித்துள்ள ஹைமவதியினிடம் முழு நம்பிக்கையுண்டு. அவளை ஒருவராலும் பேதிப்பதற்குமுடியாதென்பது அவனுடைய தீர்மானம். அதனாலேதான் பிரதாபனிடம் இவ்வாறு பிரதாபங் கூறினான். ஒருவன் தன் மனைவியினுடைய அரிய குணங்களைப் புகழ்ந்து பேசுவது தீமை விளைக்கும் என்பதைச் சந்திரசூடன் எண்ணிப் பார்க்கவில்லை. எந்தக் காலத்தில் எதைக் குறித்துப் பேச நேரிடினும் சற்று மனத்திலே அதுபற்றிச் சிந்தித்துப் பார்த்துப் பிறகுதான் பேசவேண்டும். எண்ணமுதித்ததும் அதனை வெளிப்படுத்துவது மதியாகாது. சந்திரசூடன் ஹைமவதியி னிடத்திலே கொண்டிருந்த மதிப்பினால் பிரதாபனிடம் வீண்

பிரதாபங் கூறிவிட்டான். இதற்கேற்ப அவனுக்கு அவன் வினையும் துணை நின்றது. என்ன செய்வான்? வினையைக் கடப்பதெப்படி?

இப்படிப்பட்ட குணமுடைய சந்திரசூடனிடம் பிரதாபன் மறுநாள் பகல் மூன்றுமணி நேரத்திற்குப் போய்ச் சேர்ந்தான். அப்பொழுது சந்திரசூடன் தன்னுடைய சித்தத்தையெல்லாம் தன் குலதெய்வமாகிய குமாரக் கடவுளிடம் செலுத்தியவாறே படுத்துக்கொண்டு ஏதோ யோசனையிலிருந்தான். இவனைக் கண்டதும் திடுக்கிட்டவன்போல் எழுந்து நல்வரவு கூறிவிசாரிக்கையில் பிரதாபன், தான் இந்திரபுரியிலே ஹைமவதியின் அறையிலே கண்டவற்றையெல்லாம் ஒன்றுகூட விடாமற்கூறினன். சந்திரசூடன் "இதைக் கொண்டு நான் கூறியதை நீ முடித்து வந்ததாக நிச்சயிக்க இடமில்லை. நீ இவற்றை யாரிடமாவது விசாரித்துக்கொண்டு வந்திருக்கலாம்" — என்றான். பிரதாபன், நகைத்து, "அப்படியும் செய்வானா ஒருவன்! இஃதொரு ஆண்மையாமா?—சந்திரசூடா! இன்னும் எதைப்பற்றிக் கேட்கவேண்டுமோ அதைக் கேள்—நான் கூறுகின்றேன்" என்றான். சந்திரசூடன், "அந்த அந்தப்புரத்தைச்சூழ என்ன என்ன இருக்கிறது? அதிலுள்ள படங்களிலே சிலவற்றைக்கூறு. ஹைமவதியின் படுக்கை எப்படிப்பட்டது? கட்டில் எத்தன்மையது? எதனாற்செய்யப்பட்டது? ஹைமவதியின் திருமுக மண்டலத்திற்கு எதையேனும் உவமைப் படுத்திச்சொல். அவள் உயரமா குட்டையா? வயதென்ன இருக்கும்?" என—இவ்வாறான பல கேள்

விகளைக் கேட்டான். இவற்றிற்கெல்லாம் பிரதாபன் சரியான மறுமொழிசொல்லி முடித்தான். சந்திர சூடன் வியப்படைந்து பெருமூச்சுடன் சற்று யோசித்து அப்பால், "பிரதாபா, இவற்றையெல்லாம் நீ போய்ப் பார்த்திருக்கக் கூடுமென்று நான் நம்பு கின்றேன். நீ அவளுடன் பேசினுய் என்பதற்கு என்ன அடையாளங்கூறி என்னை நம்பும்படி செய் வாய்?" என, பிரதாபன், வெகு மெதுவாய்ப் புன் முறுவலுடன், "இந்தப் பிரதாபன் ஒரு காரியத்தை முடிப்பதாகக் கூறிப் புறப்பட்டுப் பின் தவறுவது முண்டா? சந்திரசூடா! அந்நங்கையின் கழுத்திலே ஒருமச்சமுண்டு! அது அவளுடைய கழுத்துக்கு நல்ல தோர் அணிகலன்போ லிருக்கிறது!" என்ருன். இதைக்கேட்டதும் சந்திரசூடன் முகம் மாறியது. "அப்பால்".........என்று பெருமூச்செறிந்தான். பிர தாபன், "இதோ பார்!" என்று கூறிமோதிரத்தைக் காட்டினுன். அந்தோ! என்ன சொல்வதப்பால்— எப்படிச் சந்திரசூடனைப்பற்றிப் பேசுவது? அவனு யிரற்றவனுனன்; எழுந்து மரம்போல் நின்ருன்; பெருமூச்செறிந்தான்; "ஸ்திரீகளை நம்புவதுகூடா தென்பார்களே! அதனைத் தெரிந்துகொண்டேன் இன்று!" என்று வாய்விட்டுச் சொன்னுன்! பின் உதட்டை மடித்துக்கொண்டு கீழே குனிந்தவாறு சற்று நின்ருன். சை! நீ என்மீது அன்பு செலுத் தியதாய்ப் பேசிக்கொண்டு வந்ததேன்? அடி ஹைம வதி! நீ இப்படிப்பட்ட வஞ்சகியாயிருப்பா யென்று நான் சிறிதுங் கருதவில்லை. நான் மூடன்! உன்

பேச்சை நம்பினேனல்லவா ?"—என்று கூறிப் பெரு விசனத்திலாழ்ந்தான். பின் உடனே தைர்யங் கொண்டு தன் முன் நிற்கும் பிரதாபனை நோக்கி, "பிரதாபா! உன் சாமர்த்தியம் பெரிது! சந்தோஷப்படுகின்றேன்! இந்தா நானுனக்கு அளிப்பதாகக் கூறிய என் மோதிரம்!" என்று கூறித் தன் மோதிரத்தைப் பிரதாபனிடம் கொடுத்தான். பிரதாபன் அதனை மகிழ்ச்சியொடு பெற்றுக்கொண்டு மறைந்தான்.

அப்பால் சந்திரசூடன், "இப்படிப்பட்ட கொடியவளை என்ன செய்தாலாகாது! இவளைக் கடும்புலி வாழும் கானகத்திற் கொண்டுபோய் ஏன் வெட்டிவிடக்கூடாது! "உன்னை மறவேன்! உன்னை எப்படியும் அடைகின்றேன்; நீ யஞ்சாதே! — சஞ்சலப்படாதே, என்று கூறிய மொழிகளை இவளெப்படி இவ்வளவு விரைவிலே மறந்தாள் ?— என் மானம் போய்விட்டதே இந்தச் சண்டாளியினலே! அந்தோ! இனி இப்பழிமொழி யெங்கும் பரவுமன்றோ? இவளை இனி யுலகத்திலே உயிருடனிருக்க விடலாகாது" என்று தனக்குள் எண்ணித் தீர்மானித்துக்கொண்டு இந்திரபுரியில் அரண்மனை ஏவலாட்களிலொருவனும் தனக்குற்ற தோழனுயுமிருந்த சுந்தரராஜன் என்பவனுக்கு—

ஆருயிர் நண்ப!

என்னை நீ இவ்வளவு விரைவிலே மறந்திருக்க மாட்டாயென்று நான் நம்புகின்றேன். என்னைக் காதலித்தவளும் என்னையன்றி வேறோர் ஆடவனை

மணப்பதில்லையெனக் கூறிவந்தவளுமாகிய ஹைமவதியின் தீய செய்கையை எழுதித்தெரிவிக்க அஞ்சுகின்றது என்கை:—நெஞ்சந்தத்தளிக்கின்றது! விவரித்தெழுத மனம் நிலைகொள்ளவில்லை. நண்ப!—அவள் வஞ்சகி! இந்த மச்ச நாட்டிலுள்ள ஒரு மடையனை அவள் காதலித்திருக்கின்றாள்! இது தக்க ருசுவுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகலின் சிறிதும் சிந்தியாமல், என்னை உனக்கு ஓர் உத்தம நண்பன் என்பதை மாத்திரங் கருதி, அந்தப் பாதகியை அவந்திநாட்டிலுள்ள சிறுமலைக்கு அழைத்துப்போய் வெட்டிவிடு! இதனாலுன்னைப் பழி சேராது. பாபம் சூழாது! என்பொருட்டுச் செய்யும் பேருபகாரமிது! — என்னுடைய இந்த வேண்டுகோளை நிறைவேற்றத் தவறாதே!—வேறு உனக்கென்ன எழுதப்போகின்றேன் நான்?—

இங்ஙனம்,

நண்பன்,

சந்திரசூடன்.

என்று எழுதி அக்கடிதத்துடன் ஹைமவதிக்கும்:—

ஹைமவதி!—

உன்னை நான் பாராமல் எத்தனைநா ளிருக்கமுடியும்? மனம் பொறுக்க முடியவில்லை. நான் அங்குத் தலைகாட்ட முடியாதென்பதை நீயறிவாய். ஆதலின் என் நண்பனும் அரண்மனை ஏவலாளுமாகிய சுந்தரராஜனுடன் புறப்பட்டு அவந்தி நாட்டிலுள்ள சிறுமலைக்குவந்து சேரக்கடவாய்! அங்கே நான் வந்து

உன்னைச் சந்திக்கின்றேன். தவறுமல் வந்துசேர்வாய் என்று நம்புகின்றேன்.

இங்ஙனம்,

சந்திரசூடன்.

என்று ஒருகடிதம் எழுதி அனுப்பிவிட்டான்.

சுந்தராஜன், அக்கடிதங்கள்வந்ததும் அவற்றைப் பிரித்துப் படித்துப்பார்த்துப் பெருந்துயரமடைந்து "இப்படியும் நேர்ந்திருக்குமா?" என்றெண்ணி வெகு நேரம் சிந்தித்துச் செய்வ தின்னதென்று தேறும விருந்தான். பிறகு, "சந்திரசூடன் பொய்பேசுகிறவ னல்லன்? அவன் குணம் எனக்குத் தெரியாதா? அன்றியும் அவன் இவ்வாறு ஏன் எழுதவேண்டும்! தக்ககாரணமின்றி ஒன்றைச் செய்யத்துணியானே! அவன் செய்கையெதுவும் ஆழ்ந்த் யோசனையின் பேரில் தானே யேற்படும்! ஆகலின் இது நம்பத்தக்க தே யாம்! பெண்களை நம்பமுடியாது. என் நண்பனின் வேண்டுகோட் கிணங்கவேண்டியதே என் கடமை யாம்" எனத்துணிந்து தனக்குவந்த கடிதத்தை வைத்துக்கொண்டு ஹைமவதிக்கென்று வந்த கடிதத் தையெடுத்துக்கொண்டு அவளிடம்போய், "அம் மணி! சந்திரசூடனிட மிருந்து தமக்குக் கடிதம் வந் திருக்கின்றது" என்று கூறிக்கொடுத்தான். ஹைம வதி அதனை அதிக ஆவலுடன் பெற்றுப் பிரித்துப் பார்த்து, "அவர் எழுதியுள்ளது நியாயந்தான்; எத் தனை நாள் என்னைப் பாராதிருப்பார்? அவரோ இங்குவா முடியாது. இப்படிச் செய்தாலன்றி அவ ரை நான் காணவும் என்னை அவர் காணவும் இப்

போது வழியில்லை. ஆகலின் அவருத்தரவுக்கிணங்கு வதே செய்யத்தகுந்தது இச்சமயம்" என்று தீர்மானித்து, "சுந்தர! நாளை முன் இரவில்புறப்படுவோம்! நீ சித்தமாய் இங்குவந்துசேர்" என்றுகூறி அவனை யனுப்பிவிட்டுப் பிறகு வெகுநேரம் வரையில் பித்தந் தலைக்கேறியவள் தூக்கமின்றி இரவிலே கனவுகண் டபடி யிருப்பதுபோல வெகுநேரம் வரையில் அங்கோர் இடத்திலே படுத்துக்கிடந்தவாறே பலப்பல யோசனைகள் செய்துகொண் டிருந்தாள்.

ஹைமவதியினிட மிருந்து அந்த மறுமொழி பெற்ற சுந்தரன் "ஆ! என்ன புதுமையிது! இப்படியு மொரு சரித்திர மேற்படவேண்டுமா? ஆ விதியின் வன்மை பெரிது!" என்றெண்ணிக்கொண்டே தன் இருப்பிடம் சேர்ந்தான்.

---

## அத்தியாயம்—6

**அ**ன்றைப்பொழுது கழிந்தது. மறுநாள் பொழுது புலர்ந்தது முதல் ஹைமவதி தன்பயணத்திற்கு வேண்டியவற்றைச் சித்தப்படுத்தத் தொடங்கி அதிலேயே கவனமாயிருந்தாள். அவளுடைய மனத்தின் எண்ணமெல்லாம் சந்திரசூடனிடமே இருந்தது. அவளுக்கு வேறு பிரஞ்ஞையே யில்லை யெனினும் இச்சமயம் பொருந்தும்! இவளிப்படி யிருப்பதை எல்லா உயிர்களினிடத்தும் அந்தர்யாமியாக விளங்கும் பரமாத்மாவையன்றி வேறெவரும் அறியமாட்டார்கள். சுந்தரராஜ னென்னும் வேலைக்காரனும்

புறப்படச் சித்தமாயினனெனினும் தான் அன்று செய்ய நேர்ந்திருக்குஞ் செய்கையை யெண்ணி யெண்ணித் துயரமடைந்தான்; மனமிகக்கலங்கினன்; தன்னையொரு கொலைகாரனென்றே தீர்மானித்தான் என்ன செய்வான். நண்பனுடைய வேண்டுகோளை நிறைவேற்றுவதில் அவன் கொண்ட உறுதியானது அவனை அதினின்றும் மாற்றவில்லை.

இப்படி யிருக்கையில் சூரியாஸ்தமனமாயிற்று. சூரியன் மறையவே இருள் பரவியது. அதுகண்டு ஹைமவதி மனமுவந்தாள். ஏன்? தன் உயிர் நண்பனைப்பார்க்கப் புறப்படும் சமயம் நெருங்குகிறதல்லவா? அன்றியும் அவ்விருள் தான் புறப்படுவதை ஒருவரும் அறிய வொட்டாமல் காக்குமோர் அரண் போலவு மிருக்கின்றதன்றோ? இவள் மனமுவந்தாளெனினும் சுந்தரராஜனின் மனம் இருள் சூழச்சூழ அஞ்சியது!—அவன் தன்னுடைய மனத்துணிவை வெறுத்தான். என்னசெய்யலாம். எது எந்தவேளையிலே நடைபெற வேண்டுமென்பது இறைவன் நியமனமோ அந்த வேளையில் அது நிறைவேறுவது தவறுபடாதன்றோ? அப்படியே, ஹைமவதி அரண்மனையைவிட்டுப் புறப்படும் வேளைவந்தது. அந்த வேளைக்குத் தவறாமல் சுந்தரராஜன் ஹைமவதியின் முன்வந்து நின்றான். ஹைமவதியும் அவனைக்கண்ட மறுநிமிஷமே புறப்பட்டாள்! பிறகென்ன சொல்வது! மனம் ஒன்றைச்செய்ய ஒப்பியபின் அது தடைபடுமா? அதுசெய்தற்கரிதான செய்கையாமா?

இப்படிப் புறப்பட்ட அவர்கள் அடுத்தநாள்

பகல் மூன்றுமணிக்கு அவந்திநாடுபோய்ச்சேர்ந்தார்கள். அங்கொரு சத்திரமிருந்தது. அதிலேபோய்த் தங்கினார்கள். அப்பொழுது சுந்தரராஜன், "ஆ என்னபாபமிது! இந்தப்பெண்ணை என்கையால் எப்படிக் கொல்வேன்! அவன் எழுதியதை நான் தீரத் தெரிந்துகொள்ளாமல் இந்தப் பாதகச் செய்கையைச் செய்யத்துணிந்தது மதியாமா? சை! ஒன்றை நன்றாய் யோசித்துத் தெரிந்துகொண்ட பிறகு செய்பவன்றான் அறிஞனாவானேயல்லது திடீரென்று ஒன்றையுங் கவனியாமல் செய்யத் துணிபவன் அறிஞனவனா! இது எப்படிப்பட்ட காரியம்? தீரவிசாரியாமல் செய்யத்தக்கதா? அந்தோ! படுகொலையல்லவோ? — இருக்கட்டும். சந்திரசூடன் உன்னைக் கொன்று விடும்படி எனக்கு எழுதியுள்ளான் என்று இவளிடம் சொல்லிப்பார்க்கின்றேன் முதலில். பிறகு எது செய்யத் தக்கதோ அதனைச் செய்கின்றேன்" என்று சிந்தித்து உடனே ஹைமவதியை நோக்கி, "அம்மணி, ஒருசெய்தி; உம்மைக் கொன்று விடும்படி சந்திரசூடன் எனக்குக் கடிதம் எழுதியிருக்கின்றான். அதன் பொருட்டுத் தான் இங்கே தம்மை அழைத்துவந்தேனல்லது வேறல்ல. உமக்குச் சந்திரசூடன் எழுதிய கடிதமும் உம்மை இங்கு நான் சூனுவிலே அழைத்துவரும்பொருட்டுத்தான்" என்றான். இதைக் கேட்டதும் ஹைமவதி! "ஆ அந்தோ!" என்று கூறிக் கீழே விழுந்து மூர்ச்சித்து விட்டாள். நல்ல வேளையாய் அங்கு அச்சமயம் ஒருவருமில்லை. யாரேனுமிருந்திருந்தால், அவர்கள் காரணம்

வினவ, இவர்கள் அதற்கு ஏதேனும் மறுமொழி கூற வேண்டியதாகுமல்லவா? அப்படி நேராமலிருந்ததைச் சுந்தர ராஜன் நல்ல காலத்திற்கு அடையாளமாகக் கருதினன். ஹைமவதி உடனே எழுந்துட்கார்ந்து "ஆ! என்ன விபரீதகாலமிது!" என்று கூறிப் பெருமூச்செறிந்தாள். சுந்தரராஜன், அவளைப் பார்த்து, "அம்மணி! பயப்படவேண்டாம். நான் சொல்லுகிறபடி செய்யுங்கள்! நான் உம்மைக் கொலை செய்ய எண்ணி இங்கழைத்துவந்தேனெனினும் என் மனம் இப்பொழுது அதற்குடன்பட வில்லை. இப்படிப் பட்ட கஷ்டம் அநுபவிக்கவேண்டிய காலம் உமக்கு இது! சங்கட காலத்திலும் தைர்யத்தை இழக்காமலிருப்பதுதான் அறிவுடைமையாகும்! சந்திரசூடன் தன்னுடைய செய்கை தவறு என்று உணரும் வரையில் நீர் மனம் பொறுத்திருக்கவேண்டும். பொறுத்திருந்தவர்களே நன்மை யடைவர். நீர் மீண்டும் இந்திரபுரி வருவதைவிட ஆண்வேஷம் பூண்டு மச்ச நாட்டிற்கேகி உமது கணவனைக் காண்பதே நன்மையாம். ஆண்வேஷம் பூண்டுகொண்டால் நிர்ப்பயமாய்ப் பிரயாணஞ் செய்யலாம்" என, ஹைமவதி, சற்றுநேரம் ஒன்றும் பேசாமலிருந்து, "இனிச்சஞ்சலப் படுவதாலும் அஞ்சுவதாலும் யாது பயன்? எது செய்யத்தக்கதோ அதனை விரைவில் செய்வதே மதியாகும். இவன் கூறும் யுக்தியும் ஏற்றதாகவே யிருக்கின்றது. அப்படியே செய்வோம்" என்றெண்ணி, சுந்தர ராஜனை நோக்கி, ஒரு முறை பெருமூச்சுவிட்டாள். அவளுடைய இரண்டு கண்களிலிருந்தும்

நீர் தாரை தாரையாகப் பெருகியது. சற்றுநேரம் இருவரும் மௌனமாயிருந்தார்கள். அப்பால் ஹைமவதி, "ஆ விதியே! ஆ விதியே! இவ்வளவுதானோ இன்னுமுண்டோ துயர்?" என்று கூறிப் பிறகு "சுந்தரராஜா! நீ கூறியபடியே செய்கின்றேன்! கடவுளின் சித்தப்படி நடக்கட்டும்! என்னெஞ்சம் துணிந்துவிட்டது! இனி யச்சமில்லை துயரமுமில்லை. என் நாதனைக் கண்டாலாயிற்று; இன்றேல் எங்கேனும் சென்று இறக்கின்றேன்! இதுதான் என் தீர்மானம்! நீ போகலாம்!" என்று தெரிவித்து உடனே ஆண்வேஷம் பூண்டுகொண்டாள். அதற்குவேண்டிய உதவிகளைச் சுந்தரராஜன் செய்துவிட்டு அவ்விடமிருந்து புறப்பட்டான். அப்பொழுது சுந்தரராஜனை நோக்கி, "என்னை என் நாதன் கொலைசெய்யும்படி சொல்லியதற்குக் காரணந் தெரியுமோ?" என்று ஹைமவதி கேட்டாள். அவன், "காரணம் காணப்படவில்லை. நீ வேறெவனையோ காதலித்திருப்பதாகச் சந்தேகங்கொண் டிருப்பான்போலும்" என, ஹைமவதிக்கு இப்போது பிரதாபனின் நினைவு வந்தது! அவள், "சரி, தெரிந்து கொண்டேன்! என் பொல்லாதவேளை யிது! போய்வா!" என்றுகூறி யனுப்பிவிட்டு, "வந்தபாவி செய்தபழிதான் இது!" என்றுணர்ந்தாள். பிறகு தன் மோதிரம் காணப்படாமலிருப்பதை யறிந்து பெருமூச்செறிந்து "இது அவன் செய்த வஞ்சகம்?" எனத்துணிந்தாள்! அவள் மனம் படாதபாடுபட்டது—அப்பொழுது கொஞ்சதூரஞ்சென்ற சுந்தரராஜன் செல்லக் காலெழாமல்

திரும்பிவந்து ஹைமவதியை நோக்கி. "அம்மணி, என்னிடத்திலே ஒரு மருந்திருக்கிறது. இதை நீ உடம்புக்கு அசௌக்கியமாகுங் காலத்திலே உப யோகிக்கலாம். உடனே சௌக்யந்தரும்" என்று கூறிக் கொஞ்சம் மருந்தடங்கிய ஒரு சிறு புட்டியை அவளிடம் கொடுத்தான். இந்த மருந்து, அரசனு டைய இளைய மனைவியினலே சுந்தரராஜனுக்கு ஒருசமயம் கொடுக்கப்பட்டது. சுந்தரராஜன், ஹைமவதிக்கும் சந்திரசூடனுக்கும் வேண்டியவ னுகையினலே அவனைக் கொன்றுவிட வேண்டு மென்று கருதிய ராணி அவனிடம் "இது நல்ல மருந்து, மிக உயர்வானது; உடம்பிலே எந்த அசௌக் யமுண்டாயினும் அதனை நீக்கும்" என்று கூறிக் கொடுத்தாள். அதனைச் சுந்தரராஜன் நம்பிக்கையு டன் பெற்றுக்கொண்டான். பிறகு அவன் அதனை உபயோகிக்கவே யில்லை. இப்பொழுது சமயம் நேர்ந்தமையினலும் ஹைமவதியினிடம் கொண்ட இரக்கத்தினலும் அந்த மருந்தை அவளுக்குக் கொடுத் தான். அவன் என்னசெய்வான். நல்லதை எண்ணிச் செய்தான்! கொல்லும் விஷமென்று அவன் கண் டானு?—இம்மருந்து ராணியினலே சுந்தர ராஜனுக் குக் கேடு நினைந்து கொடுக்கப்படினும் அது நன்மை தரு மருந்தாகவே இருந்தது! எப்படி?—ராணி, அரண் மனை வைத்தியனெருவனை யழைத்து, "எனக்குக் கொஞ்சம் விஷம் வேண்டும். அது எதையும் கொன்று விடும் என்கிருர்களே! அதை நான் மிருகங்களி லெதற்கேனும் போட்டுப் பரீக்ஷித்துப் பார்க்கவேண்

டும். ஆதலின் கொஞ்சம் கொண்டுவந்து கொடும்" என்று கேட்டாள். வைத்தியன் புத்திசாலி யாகையி னால் "இவள் துஷ்டை! இவளுடைய பேச்சை நம்பப் படாது. விஷம் இவளிடம் கொடுக்கத்தக்கதல்ல ஆதலின், நஞ்சைப்போல் கொஞ்சநேரம் வரையிலே குணத்தைக் காட்டக்கூடிய வஸ்துவை இவளிடத் திற் கொடுத்து வைப்போம்" என்று கருதி அவளி டத்தில் அப்படிப்பட்ட வஸ்துவைக் கொடுத்தான். அதனை ராணி நஞ்சென்றே நம்பியிருந்தா ளாதலால், சுந்தரராஜனுக்குக்கொடுத்தாள். சுந்தரராஜன் அதனை இப்பொழுது ஹைமவதிக்குக்கொடுத் தான். நல்லவர் களுக்குச் செய்யும் தீமையும் நன்மையாக மாறு மென்பது கண்டோமல்லவா? இந்தமருந்து ஹைம வதிக்கு என்ன நன்மையைச் செய்கிறதென்று பார்ப் போம்—

இப்படிப்பட்ட மருந்தைக் கொடுத்த சுந்தர ராஜன், ஹைமவதியைக் கண்களிலிருந்து நீர் பெருக நோக்கி, "அம்மணி! ஜகதீசன் உமக்கு எங்குந்துணை யிருப்பார்; எந்தத் தீங்கும் நேரிடாமல் காப்பார். உமது புருஷனை நீர் விரைவிலடைவீர்!" என்று கூறிப் பிரியமாட்டாமல் அவளைவிட்டுப் பிரிந்தான்.

## அத்தியாயம்—7

ஹைமவதி உடனே அங்கிருந்து எழுந்து "ஜகதீசா! நின் திருவடியே துணையென நம்பினேன்! திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை யென்பது பொய்யல்லவே? கடவுளை நம்பினவர்கட்கும் அவன் துணை கொண்டவர்கட்கும் ஒரு தீங்கும் நேரிடாதென்பதும் பொய்யல்லவே! உன்னை யன்றி உலகத்தில் ஒரு செயலுமில்லையென்பதும் பொய் யல்லவே!—பரம காருண்ய மூர்த்தியே! இதோ உன்னைப் பணிகின்றேன். உன் பாதாரவிந்தமலரைத் துணையாகக் கொள்கின்றேன். உன்னைத் தியானிக்கின்றேன்; துதிக்கிறேன்"—என்று நினைந்துகொண்டே புறப்பட்டு நடந்தாள். நடந்தவள் சிறிதும் அச்சமின்றி காடு, மலை, வனம் முதலியன கடந்து வெகுதூரஞ் சென்று அப்பால் ஒரு மலையடி வாரத்தை யடைந்து அங்கொரு மரத்தடியிலே உட்கார்ந்து இளைப்பாறிப் பின் சற்றுப் படுத்திருந்து அப்பால் அம்மலை விநோதங்காண வெண்ணி அங்கெங்கும் போய்ப் பார்த்தாள். அப்பொழுது அவளுக்கிருந்த பசி பொறுக்கமுடியாததாயிருந்தது. என்ன செய்வாள்! காசுகொடுத்தாலும் அங்குச் சோறுபோடுகிறவர்களுண்டா? ஆகையினால் மனங் கலங்கினாள்; என்ன செய்வதென்று தோன்றாதவளானாள்; "அந்தோ இரண்டு நாட்களாய் நடக்கின்றேனே பாவி! இவ்வளவு சங்கடங்களை நானேன் படவேண்டும்? என்மீது விருப்பமற்றவனிடம் விருப்பங்கொண்டிருப்பதனாற்றானே; அந்தோ! அன்பு கொடிது! அதுஎன்னை எவ்வ

ளவுதூரம் இழுக்கின்றது! ஒரு பெண்பிள்ளை, ஆண் வேஷம் பூண்டதனால் எப்படிப் பலமுடைய வீரனாய் விடுவாள். பூனை உடம்பிலே சூடிட்டுக்கொண்டால் புலியாய்விடுமா? என்ன கஷ்டம்! என்ன கஷ்டம்! ஐயோ கொஞ்சம் அன்னமுண்டாலன்றி உயிர் தரியாதுபோலிருக்கின்றதே; என்ன செய்வேன்! தெய்வமே! நீ காட்டினாலன்றி வேறு வழியைக் காணேன்! இந்தக் குகைக்குள் நுழைந்து பார்க்கட்டுமா? ஏதேனும் தின்பண்டமிராதா? பார்க்கின்றேன்—" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு அந்தக் குகைக்குள் நுழைந்தாள். அங்கு ஒரு பாத்திரத்திலேசோறு கொஞ்சமிருக்கக்கண்டாள். அது இரண்டு நாளைக்கு முன்னே வைக்கப்பட்ட சோறுபோலிருந்தது. இதுவரையில் ஹைமவதி இப்படிப்பட்ட சோற்றைக் கையாலுந் தொட்டறியாள். ஆயினும், அவள் தன் பசியின் கொடுமையினால் அதனை ஆவலோடு எடுத்து உண்டாள். பிறரால் வைக்கப்பட்ட சோறாயிற்றே என்றும் நினைக்கவில்லை. எப்படிக் கருதுவாள்? பசித்துன்பம் பெரிதன்றோ? பசிவந்திடப் பத்தும் பறந்து போம்—என்பது பொய்யாமோ? பசியின் கொடுமைக்குள்ளானவர்கள் இறந்து கிடந்த நாயின் இறைச்சியையும் குதிரையின் இறைச்சியையும் இவைகளையன்றி மனிதனுடைய இறைச்சியையும் புசித்திருக்கின்றார்களென்று நாம் கதைகளிலே படித்தும் உலகத்திலேசொல்லவும் கேள்விப்பட்டுமிருக்கின்றோமன்றோ? அப்படியிருக்க இவள் எப்படிப் பொறுப்பாள் அந்தப் பசித்துன்பத்தை?—இங்ஙனம் இவள்

புசிக்கையில், வெளியிலே யாரோ வரும் சத்தங்கேட்டது. அது செவியிலே பட்டதும் மான்போல் மருண்டு பார்த்து வெளிப்பக்கம் செவி சாய்த்து நின்றாள். இவள் எழுந்தவுடன் நல்ல அழகிய ரூபமுடைய இரண்டு சிறுவர்களுடன் ஒரு புருஷன் அக்குகைக்குள்வரக் கண்டாள். கண்டதும் இவள் கைகால்கள் நடுங்கின. "ஏன் பயப்படுகின்றேன்! பயப்பட்டால் தப்ப வழியேது?" என்று எண்ணி உடனே தைரியங்கொண்டு, சற்று முன்வந்து "ஐயா, நான் இந்தக் குகையில் நுழைந்ததற்கும் இங்கிருந்த சோற்றையுண்டதற்கும் என்னை மன்னிக்கவேண்டும். நான் தின்ற இந்தச் சோற்றுக்குப் பணந் தந்துவிடுகின்றேன். பெற்றுக்கொள்ளுங்கள். இங்கு எங்கும் பணங்கொடுத்தாலும் சோறுபோடுவாரில்லாமையால் பசி பொறுக்கமாட்டாமல் பெருந் தொந்தரவடைந்த நான் இக்காரியஞ் செய்யத் துணிந்தேன். என்னை மன்னிக்கவேண்டும்" என்று கூறிப் பணத்தை எடுத்துக்கொடுத்தாள். அவர்கள் பார்த்து ஆச்சர்யமடைந்து பிரமித்து நின்றுவிட்டார்கள்; பணத்தைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். அது கண்ட ஹைமவதி, "ஓகோ! இவர்கள் கோபங்கொண்டிருக்கின்றார்கள்! என்ன செய்வது" என்கிற அச்சமுடையவளாய் அவர்களை மறுபடியும் பார்த்து, "என்னை மன்னியுங்கள்! என்மீது கோபங்கொள்ள வேண்டாம். இவ்வாறு நான் என்னுடைய பசியைத் தீர்த்துக்கொள்ளாவிடில் நான் இறந்தே போயிருப்பேன். உங்களுடைய சாப்பாடு எனக்கு என்னுயிரைக்

கொடுத்தது. உங்களுக்குப் புண்யமுண்டு. கடவுள் உங்களுக்கு எல்லா நலங்களேயுந் தந்தருளுவார்!" என்று கூறிப் பிரார்த்தித்தாள்.

இப்படிப் பிரார்த்திப்பது கண்ட அந்த மனிதன் இரக்கங்கொண்டு, 'இருக்கட்டும், நீயார் எங்கே செல்கின்ருய்? உன் பெயர் ஊரென்ன?" என்று கேட்டான். ஹைமதி, "என் பேயர் மாணிக்கம். நான் மச்சநாட்டுக்குச் செல்கின்றேன். அங்கு என் நண்பனிருக்கின்ருன். அவனைச் சந்தித்துப் பேசிவரப் போகின்றேன்" என்று கூறிஞள். அவன், "அப்பா! சிறுவனே, எங்களை நீ தாழ்ந்தவர்களாக நினைக்காதே! லோபிகளென்றுங் கருதாதே! இவர்கள் இந்தக் காட்டிலேவசிப்பதனுல் காட்டுமனிதர்களுக்குரிய முரட்டுக் குணமுடையவர்களா யிருப்பார்களென்றும் நீ நினைக்காதே! நீ வெகு தூரம் போகவேண்டியவன். ஆகையினுல் நீ இன்றிரவு இங்கிருந்து நல்ல சாப்பாடு சாப்பிட்டுவிட்டுச்செல். நீ இப்படிச் செய்வாயாளுல் நாங்கள் மிகுதியும் திருப்தியடைவோம்" என்றனன். ஹைமவதி "ஓ இதுவும் தெய்வத்தின் திருவருள்தான்! என் பங்கில் தெய்வமிருக்கின்றதா?" என்றெண்ணி, "அப்படியே இருந்து புசித்துவிட்டுச் செல்கின்றேன். நீங்கள் அன்புடன் வேண்டி இடும் சாப்பாட்டை நான் தட்டிச்செல்வது தருமமாகுமா; அப்படியே இருந்து செல்கின்றேன்" என, அவர்கள் சந்தோஷமடைந்து அங்குட்கார்ந்து சற்றுநேரம் பேசிக்கொண் டிருந்தார்கள். பிறகு ஹைமதி, எல்லோருக்கும் தானே சமைப்பதாகக்

கூறிச் சமையல் செய்யத் தொடங்கி வெகு சீக்கிரத்தில் நல்ல சமையல் செய்து முடித்து அவர்களைச் சந்தோஷப் படுத்தினாள்.

இவள் இராஜ குமாரத்தியே யெனினும் புவநேந்திரன் இவளுக்கு நன்றாய்ச் சமைக்கவும் வீட்டு வேலைகளைச் செவ்வனே செய்யவும் கற்றுக் கொடுத்திருந்தா னாகையால் இச்சமயம் இவளுக்கு அந்தப் பயிற்சி பயன்பட்டமையின் அவள் தன் தந்தையை நினைந்து அவனுக்கு வந்தனம் புரிந்தாள்; ஆனால் இதே சமயத்தில் தன் தலைவிதி யிருக்கும் நிலையைக் குறித்து வருந்தினாள். பிறகு எல்லோரும் போஜன மருந்தினார். குழம்பும் கறியும் நன்றாய்ப் பக்குவப் படுத்தப்பட் டிருந்தமையின், ஹைமவதியை அவர்கள் புகழ்ந்து கொண்டாடினார்கள்; நன்றாய்ச் சாப்பிட்டுக் களித்தார்கள். ஹைமவதிக்கும் அவர்களிடம் நல்ல எண்ணம் ஏற்பட்டது. ஆதலால் அவள் தான் தன்னுடைய பிரயாண அலுப்புத் தீர்கிறவரையில் அங்கிருந்து பிறகு புறப்படுவதெனத் தீர்மானித்துக் கொண்டாள். ஹைமவதி இவர்களுடன் மூன்றுநா ளிருந்தாள். இந்தமூன்றுநாட்களுக்குள் இவர்களுக்குள் பெருகிய அன்பு கரைகடந்ததாயிருந்தது. ஹைமவதி நல்ல புத்திசாலி. ஆகையால் இதற்கேதேனும் காரண மிருக்கவேண்டுமென்று சில சமயம் ஊகித்தாள். இரண்டு சிறுவர்களும் ஹைமவதியைத் தங்கள் தமக்கை போலவே கருதி அன்பு பாராட்டி வந்தனர். ஹைமவதியின் உள்ளத்திலும் சகோதர வாத்ஸல்யம் வளர்ந்து வந்தது. உள்ள

படியே இவர்கள் ஹைமவதியின் சகோதரர்கள்தான்! எப்படி ?—புவநேந்திரனுக்கு மதிபாலன், நீதிபாலன் என்கிற இரண்டு குமாரர்களிருந்து காணமற்போயின ரென்று நாம் படித்திருக்கின்றோமல்லவா? அவர் கள்தா னிவர்கள். அவர்களிங்கு எப்படி வந்தார்கள்? இவர்களுட னிருக்கும் மனிதன் இந்திரபுரியிலே வசித்த பிரபுக்களிலே ஒருவன். இவனை ஒரு காரண மாக புவநேந்திர பூபதி தேசப் பிரஷ்டம் செய்தான். இவன் பெயர் ஸம்பத் குமார மூர்த்தி என்பது. இவன் அதனாலே அரசனிடம் கோபங்கொண்டு அவன்குமா ரர்களை அபகரித்தான். ஆயினும் அவர்கள்மீது கொண்ட கருணையினால் அவர்களைக் கொல்லாமல் இந்நாள்வரையிலே காப்பாற்றி வருகிறான். இவர்க ளிடத்திலே ஹைமவதியைக் கொண்டுவந்து சேர்த்த தெய்வச் செயலை யென்னென்பது! இந்தச் சிறுவர்க ளும் ஹைமவதியும் ஒரே தாயின் உதரத்திலே வளர்ந் தவர்க ளாகையினாலே சந்திப்பு நேர்ந்த இச்சமயம் அன்பு இவர்களை யறியாமலே பெருகுகிறது. ஸம் பத் குமார மூர்த்தியும் நல்ல குலத்திலே பிறந்த பிரபு வான தினாலே கருணைக் கிருப்பிடம்போலானான்.

இப்படிப்பட்ட இவர்கள் எல்லோரும் சேர்ந்து மூன்று நாளும் வேட்டைக்குப்போய் வந்தார்கள். நான்காவது நாள் காலையிலே வேட்டைக்குப் புறப் படுகையில் ஹைமவதியின் உடம்புக்குச் சௌக்யக் குறைவேற்பட்டமையின், அவளைக் குகையிலேயே இருக்கும்படி விட்டுவிட்டு மூவரும் சென்றனர். ஹைமவதிக்குத் தன் அன்பன் சந்திரசூடனைக் காண

வேண்டுமென்கிற அவாவில்லையானால் அவள் தன் காலத்தையெல்லாம் இவர்களுடன் இந்தக் காட்டி லேயே கழித்துவிடுவாள். அவளுடைய மனம் அவ்வளவு சமாதான மடைந்திருந்தது. என்ன செய்யலாம். தெய்வ சித்த மவ்வா றில்லையே!

இவ்வாறான நிலைமையில் தனித்திருக்கும் ஹைமவதிக்கு இப்பொழுது, சுந்தரராஜன் கொடுத்துவிட்டுப்போன மருந்தைப் பற்றி நினைப்புவந்தது. அவள் உடனே அதனை யெடுத்துக் கொஞ்ச மருந்தினாள்; அருந்திய மறுநிமிஷமே கீழே விழுந்து பிணம்போல் மூச்சுப்பேச்சில்லாதவளானாள். இந்த இரகஸ்யத்தை ஹைமவதி யெப்படியறிவாள்? தனக்குச் சுகந்தருமென்று கருதி அம்மருந்தை யருந்தினாள். அதன் பயனிப்படியாகவே, கொஞ்சநேரத்திற்கெல்லாம் அவர்கள் வேட்டையாடி விட்டுத் திரும்பி வந்தனர். அவர்கள் முதலில் ஹைமவதியைப் பார்த்ததும் நித்திரை செய்வதாக நினைத்துச் சந்தடி செய்யாமற் கொஞ்சநேர மிருந்து பார்த்தார்கள்; பிறகு சந்தேகங்கொண்டு எழுப்பினார்கள். எழுந்திராமையினால் இறந்துவிட்டான் இவனென்றெண்ணிப் பிரேதத்தை அவர்களுடைய தேசத்திலே எடுத்துச் செல்லும் முறைப்படி ஹைமவதியை மூவரும் வெகு துக்கத்துடன் எடுத்துக் கொண்டு போய் வேறொரு காட்டிலே ஒரு மாத்தினடியிலே வைத்து, அவள்மீது தழைகளையும் மலர்களையும் தூவி மூடி அவளுடைய ஆத்மா நல்ல கதியை யடையும் பொருட்டுக் கடவுளைப் பாடித் துதித்துக் கும்பிட்டுத்

திரும்பிவிட்டார்கள். இவர்கள் இவ்வாறு செய்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஹைமவதி அம்மருந்தின் வேகமடங்கித் தெளிவடைந்து எழுந்து கண்களை விழித்துப் பார்த்துத் தானிருக்குங் கோலங் கண்டு வியப்பும் விசனமும் பயமுமடைந்து அப்பால், "என்ன ஆச்சர்யமிது; நான் இங்கே எப்படி வந்தேன். குகையிலிருந்து என்னையார் கொண்டுவந்து இப்படிச் செய்தது? காரணந் தெரியவில்லையே! அந்தோ! நான் இந்தப் பக்கமிருக்கின்றே னென்பதுந் தெரியவில்லையே! பரம கருணா நிதியே! என் வினைக்கீடாக நான் இன்னும் அடைய வேண்டியது யாதோ அதுவுந் தெரியவில்லையே! என்னிலும் துன்ப மநுபவித்தவர்களுண்டோ உலகத்தில்? ஜகதீசா! என்ன செய்வேன்! குகைக்குப்போக வழி தெரியவில்லை, கண்ணைக் கட்டிவிடப்பட்டவள்போ லிருக்கின்றேனே—" என்று கூறிப் புலம்பியழுது எழுந்திருந்து தன் மனம்போனபடி நடந்தாள்; பின் என்ன செய்வாள்!

## அத்தியாயம்—8

ஹைமவதி இப்படிப்பட்ட பரிதாபமான நிலையில் கண்ணும் கண்ணீருமாகச் செல்லும் ஆரண்யத்தின் வழியே மச்சநாட்டிலிருந்து சேனைகள் சென்று கொண்டிருந்தன. அவற்றைக் கண்டதும் ஹைமவதி நின்றாள். அவர்கள் ஹைமவதியை நெருங்கியதும் அவளைப் பிடித்துக்கொண்டார்கள். இப்பொழுது

ஹைமவதி, அவர்களைத் தன் தந்தைக்கு விரோதமாகப் படையெடுத்துப் போகிறவர்களென்று தெரிந்துகொண்டாளாகையால், "ஓ இப்படிச் சிறைப்பட வேண்டியதும் நமது பாபத்திற்கு ஏற்பட்டுள்ள தண்டனைகளிலே ஒன்றுபோலிருக்கிறது!" என்றெண்ணி பெருந் துயரத்திற்கு அடிமைப்பட்டவள்போலிருந்தாள். அவர்கள் இவளை இந்திரபுரியைச் சார்ந்த வாலிபனென்று தெரிந்துகொண்டபடியால், அவர்களுடைய சேனாதிபதிக்கு ஒரு வேலைக்காரப் பையனாக ஏற்படுத்தினார்கள். ஹைமவதி "எதுவரினும் வருக! எல்லாவற்றையும் அநுபவிக்கச் சித்தமாயிருக்கின்றேன்! ஈசனே எல்லாம் உனது ஆஞ்ஞையேயன்றோ?" என்று எண்ணி மனந்தேறியிருக்கின்றபடியால் ஒன்றையுங் கருதி மனஞ்சோராமல் தன் எஜமானுடைய வேலையைத் தளராமலும் தவறாமலும் செய்வதிலே கவனமுடையவளாயிருந்தாள். இன்பத்தையும் துன்பத்தையும் ஒரே தன்மையிலே வைத்து, நடப்பது நடக்கட்டும் என்னும் திடமுண்டாயின் அப்புறம் இன்பத்தின் பயனும் துன்பத்தின் பயனும் வேறுபட்டுக் காணுமோ?—

இப்படிப்பட்ட தன்மையிலிருக்கும் ஹைமவதி எல்லாவற்றையும் மறந்தாள். தன் அன்பன் சந்திரசூடனைக் கண்ணாலேனும் காணும் ஒரு சிறு புண்ணியம் எனக்கிருக்குமாயின் போதுமென்றிருந்தாள். வேளை வருமாயின் எது நிற்கும்! அப்படிப்பட்ட ஒரு வேளை வந்து கூடுவதற்கறிகுறியாகப் புவநேந்திரனுடைய சேனைகள் இவ்வாரண்யத்திலே வந்துசேர்ந்து மச்ச

நாட்டுச் சேனைகளை எதிர்த்தது. பிறகு பெரும்போர் விளைந்தது. இதிலே மச்சநாட்டு மன்னன் சேனைகள் தோல்வியடைந்து நாற்புறமும் ஓடின! புவநேந்திரன் வெற்றிக்கொடி உயர்த்தினன். ஜயபேரிகை முழங்கியது!

இப்பொழுது ஹைமவதியும் அவள் எஜமானனும் கைதிகளாய்ப் புவநேந்திரன் முன்பு கொண்டு வரப்பட்டார்கள். இவ்வாறே ஹைமவதியினுடைய பகைவனாகிய பிரதாபனும் கொண்டுவரப்பட்டான். இவன் மச்சநாட்டுச் சேனைத்தலைவர்களுள் ஒருவனாய் அமர்ந்திருந்தான். இப்பொழுது சந்திரசூடனையும் புவநேந்திரனுடைய சேனாதிபதியொருவன் அரசன் முன் கொண்டுவந்து நிறுத்தி, "அரசே! இவன் பழைய குற்றத்திற்காகக் கொலைசெய்யத் தக்கவன். இப்பொழுது இவன் நம்மோடு சேர்ந்து போர் புரிந்து எதிரிகளை முறியடித்துத் துரத்தியதற்காக இவன் இப்பொழுது சமுகத்திலிருந்து வெகுமதியுமடையத்தக்கவன்" என்றான். சந்திரசூடனைக் கண்டதும் ஹைமவதி தன் அன்பனென்று தெரிந்துகொண்டாள். ஆனால் சந்திரசூடன் ஹைமவதியைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவள் புருஷ வேஷம் பூண்டு கொண்டிருக்கிறாளல்லவா? இப்படியிருக்கையில் இன்னொரு சேனாதிபதி, மதிபாலன், நீதிபாலன் அவர்களையபகரித்துப் போன ஸம்பத்குமாரமூர்த்தி இவர்கள் மூவரையும் கொண்டுவந்து நிறுத்தி, "பிரபுவே! இவர்கள் முழுவன்மையுடன் போர் செய்து நமக்கு வெற்றி யுண்டாக்கியவர்கள். இவர்கள் வெகு மதி

யடையத்தக்கவர்கள் !" என்று கூறினன். இந்தச் சந்தர்ப்பத்திலே அரண்மனே வேலைக்காரனும் ஹைமவதிக்கும் சந்திரசூடனுக்கும் வேண்டியவனுமான சுந்தரராஜனும் இங்கு வந்திருந்தான்.

இவ்வாறு எல்லோரும் ஒருங்கு சேர நேர்ந்ததைக்கண்டு ஹைமவதி வியந்தாள்; "என் அன்பன் இங்கு ஏன் வந்தான்! அவன் தன் வாழ்வைவெறுத்து அரசனுடைய முன் ஆஞ்ஞைப்படி இறக்க மனந் துணிந்து வந்தானே? அந்தோ இதற்கென்ன செய்வேன்! எப்படி இந்த வேளே இவனைக் காப்பாற்றுவது !" என்று எண்ணிப் பெருந்துயர மடைந்தாள்; ஆனல் எல்லோரையும் இப்படிக் கூட்டிவைத்த தெய்வத்தின் செயல் நன்மை தரத்தக்க தாகத் தானிருக்குமென்றும் ஊகித்தாள். தன்னுடைய பகைவனுகிய பிரதாபன் சிறைப்படுத்தப்பட்டு அரசன் முன் கொண்டுவரப்பட்டதுகண்டு, கெடுவான் கேடு நினைப்பான் என்கிற பழமொழியை நினைத்துக் கொண்டாள். அங்கு சுந்தரராஜன் வந்திருப்பது கண்டு "ஆ கடவுளின் திருவருட்டிறன் வியக்கத் தக்கதே !" என்று கருதினுள். ஆனல் இவள் தான் இவ்வளவு துன்பத்திற்கு முள்ளானது அவனலே என்பதை யறியாள். அவன் கையில் தன் கை மோதிர மிருக்கக்கண்டு வயிறெரிந்தாள்; இதில் ஏதோ சூதிருக்கிறதென்று நிச்சயித்தாள். சுந்தர ராஜன் ஹைமவதியை நன்ருய்த் தெரிந்து கொண்டானுகையால் சந்தோஷமடைந்து இனி நடப்பது நடக்கட்டும் என்றெண்ணி வேறு பேசாமலிருந்தான். மதிபாலன்,

நீதிபாலன், ஸாம்பத் குமாரமூர்த்தி இவர்களையும் ஹைமவதி தெரிந்துகொண்டு ஆச்சரியப்பட்டாள். அவர்களும் இவளைப்பற்றி சந்தேகித்து, "இவன் நம்முடைய குகைக்கு வந்து உண்டு நம்முடனிருந்து இறந்துபோனவனே" என்றும், "அவனுயிருந்தால் இவன் நம்முன் பேசாமலிருக்கக் காரணம் இல்லையே" என்றும் மெதுவாய் ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டார்கள். இதை ஹைமவதி கவனித்துக் கொண்டே தன் எஜமானருகிலே நின்றுகொண்டிருந்தாள்.

இப்படியிருக்கையில் ஹைமவதியினுடைய எஜமானுகிய மச்சநாட்டுச் சைன்யத் தலைவன் புவநேந்திரனைப்பார்த்து, "அரசே" என்றழைத்து "தாம் சிறைப்படுத்தியுள்ள எங்களை யெல்லாம் கொல்லப் போவதாக நான் கேள்விப் பட்டேன். அப்படி நேருமாயின் நான் என்னுடைய தீரங்குன்றுமல் நின்று உயிரைவிடச் சித்தமா யிருக்கின்றேன். ஆனுல்தாங்கள்கவனிக்கத்தக்கதொன்றுளது. இதோ என்னருகிலிருக்கும் இச்சிறுவன் இந்திரபுரியைச் சார்ந்தவன். இவனைமாத்திரம் பணம் வாங்கிக் கொண்டு விடுவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். இவன் சிறியவனேயெனினும் அறிவிலே பெரியவன். இவனைப்போல் அடக்கமும் உழைப்பிலே சுறுசுறுப்புமுடைய வேலைக்காரன் உலகத்திலே கிடைக்கமாட்டான். நல்ல நம்பிக்கையுடையவன். பொறுமையைப் பூஷணமாகப் பூண்டவன்.

இவன் பிறருக்குத் தீங்கு நினையாத உத்தமன். இவனைமாத்திரம் விடுவிக்கவேண்டும்" என்றான்.

இதைக் கேட்டலும் அரசன் வியப்புற்று ஹைமவதியை யுற்றுநோக்கியவாறே "நான் உன்னை எங்கேயோ பார்த்திருக்கின்றேன். உன்னிடம் எனக்கு இரக்கமுண்டாகிறது. அதற்குக் காரணம் எனக்குத் தெரியவில்லை. நீ சுகமா யிருக்கக் கடவாய்! உன்னை நான் விடுதலை செய்கிறேன். உனக்கு வேண்டும் வரம் யாது?" என்று கேட்டான். இப்பொழுது ஹைமவதி மிகவும் வணக்கத்துடன் தலைகுனிந்து அரசனுக்கு வந்தனஞ் செய்து தன் எண்ண மெதுவோ அதனை வெளியிடப் போனாள். அதற்குள் அவள் எஜமானனாகிய சேனாதிபதி தன்னுடைய உயிரைக் கேட்பான் என்றெண்ணி ஹைமவதியை நோக்கி, "அப்பா! நீ என்னுயிரைக் கேட்பாய்! அதனை நான் விரும்பவில்லை" என, ஹைமவதி, "! நான் கேட்கப் போவது தமது பிராணனல்ல. நீர் சந்தேகப்பட வேண்டாம். நான் கேட்கப்போவது வேறு. அதனால் ஒரு தீயன் இப்போது வெளிப்படப்போகின்றான்" என்று கூறினாள். இதைக் கேட்டதும் எல்லோரும் வியப்புற்று அவன் வாயிலிருந்து எது பிறக்குமோ என்று எதிர் பார்த்தவர்களா யிருந்தார்கள். இப்பொழுது ஹைமவதி பிரதாபனை உற்றுநோக்கினாள். இதைக்கண்ட சுந்தரராஜன் மனமுவந்து தனக்குள் "நல்லது செய்கின்றாள் இதுவே யுக்தி" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். ஹைமவதி பிறகு அரசனை நோக்கி, "பிரபுவே! இதோ

இங்கு நிற்கின்றானே இவன் கையில் அணிந்துகொண்டிருக்கும் வைர மோதிரம் இவனுக்கு எப்படிக் கிடைத்ததென்பதை மாத்திரம் வெளிப்படுத்தினால் எனக்குப்போதும், வேறு வரம் வேண்டேன்" என்றான். அரசன் உடனே, "இதோ வெளிப்படுத்துகின்றேன்" என்று கூறி அந்தப் பாதகனை நோக்கி, "நீ அணிந்துகொண்டிருக்கும் மோதிரம் உன் கைக்கு எப்படி வந்தது? உண்மையைச்சொல், இன்றேல் உன்னைச் சித்திரவதை செய்யும்படி ஆஞ்ஞையிடுவேன்" என்று பயப்படுத்தினான்.

இப்பொழுது பிரதாபனுடைய பிரதாபங்களெல்லாம் வீணாயின. சந்திரசூடன் இதைக் கண்டு "என்னே இது" என்று வியந்தான். சுந்தரராஜன் குதூகலங் கொண்டான். ஏனையர் எல்லோரும் கூத்திடைக் கோமாளி வந்ததுபோல் இது வேறு புதுமை தோன்றுகிறதேயென்று நினைத்து வியந்தனர்.

## அத்தியாயம்—9

பிரதாபன் மெய்ந் நடுக்கத்துடன் சற்று முன் வந்து அரசனை நோக்கி "பிரபுவே! உண்மையை ஒளியாமற் கூறிவிடுகின்றேன். என்னை மன்னிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டு, தனக்கும் சந்திரசூடனுக்கும் பந்தயப்பேச்சு நடந்ததையும் அப்பால் தான் இந்திரபுரிவந்து அரண்மனையிலே பிரவேசித்துத் தந்திரமாக ஹைமவதியின் கைமோதிரத்தைக் கொண்டுபோனதையும் பின்னர் சந்திரசூடனி

டஞ்சென்று அவனிடம் அம்மோதிரத்தைக் காட்டி அவன் கையிலணிந்திருந்த ஹைமவதியின் மோதிரத்தைத் தான் பெற்றுக்கொண்டதையும் சிறிதும் விடாமல் கூறிமுடித்தான்.

இவற்றைக் கேட்ட சந்திரசூடன், "அந்தோ! என்னைவிட ஒரு பாவியுண்டோ? நிரபராதியின்மேல் வீண் பழி நினைந்து கொலைசெய்ய நண்பனைத் தூண்டினேனே! சை! நான் ஓர் அறிவுடைய ஆண்மகனா?" என்று கருதிப் பெருந் துயரத்துடன் சற்றுமுன்வந்து வேந்தனை வணங்கி, தான் தீரத் தெரிந்துகொள்ளாமல் செய்ததைக் கூறித் தன்னைத் திட்டிக்கொண்டு ஹைமவதியை நினைந்து அவள் பெயர்கூறி அழுது கொண்டே, "ஆ உன்னைக் கொன்ற பாபத்திற்கு எனக்கு என்ன தண்டனைதான் கிடைக்கப்படாது! மகா பாபியாகிய எனக்கினி இந்த உலகத்திலே என்ன மதிப்புண்டு? என்னைவிட மூடனுமுண்டோ உலகத்தில்? ஆ தெய்வமே!—தெய்வமே—" என்று கூறிப் பெருமூச்செறிந்து வெட்டுண்ட மரம்போல் தரையிலே சாய்ந்தான்! இதனை எப்படி ஹைமவதி பொறுப்பாள்? தன் உயிரன்றோ தவிக்கின்றது? ஆகலின் உடனே முன் வந்து தன்னை வெளிப்படுத்திக் கொண்டு அரசன் முன்னிலையில் இருகரங்குவித்துக் கும்பிட்டபடி நின்றாள். சந்திரசூடனும் அளவிடப் படாத ஆநந்தத்துடன் எழுந்து தன் இரு கரங்களையும் குவித்துக்கொண்டு மன்னனை நோக்கி நின்று, "மன்னிக்கவேண்டும்! எங்களன்பு நீடூழி காலம் நிலைத்திருக்கக் கருணைபுரியவேண்டும்! தாங்கள் என்னை

வெறுத்துத் தேசப்பிரஷ்டம் செய்ததை நினையாமல் தங்களுடைய பகைவர்களுக்குப் பகைவனாய்த் தங்களுடைய சேனையின் பக்கமிருந்து போர்புரிந்து தம் முன் தோன்றியது, சந்திரசூடன் தன் தேசத்துக்குப் பாடுபட்டிறந்தானென்னும் புகழ் பூணவேயாகும். இப்பொழுது அந்த என் எண்ணப்படி தாம் நிறைவேற்றிடினும் நான் மனமுவந்து அதனை யேற்றுக் கொள்கின்றேன். தங்கள் சித்த மென்பாக்யம்!'' என்றான்.

என்ன செய்வான் மன்னன்! தன் மகளைக் கண்ட பரமானந்தத்திலே மூழ்கியிருக்கும் அவனுடைய சித்தம் சந்திரசூடனிடம் முன்கொண்ட பகைமை பாராட்டுமா?—இப்பொழுது மன்னன் "சந்திரசூடனுக்கு ஹைமவதி மனைவியாக வேண்டியது தெய்வத்தின் சித்தம்; அதனாலேதான் இங்கு இவ்வாறு சந்திப்பு நேர்ந்தது!" என்று கருதி, "மனமொத்த அன்புடையவர்களாகிய உங்களுடைய திருமணம் இறைவன் திருவருளால் விரைவில் இனிது முடிக!" என்று கூறி "உங்களைக் கடவுள் காப்பாற்றுவாராக!" என்றாசீர்வதித்தான்.

இப்பொழுது ஸம்பத் குமாரமூர்த்தி, மதிபாலன் நீதிபாலன் இருவரையும் முன்னே கொண்டுவந்து விட்டு, கைகுவித்து நின்று, "வேந்த, உமது திருக் குமாரர்க ளிருவரையும் ஏற்றுக்கொண்டு என்னை மன்னிப்பீராக? நான் உம்மிடம் விரோதங் கொண்டு உமது குமாரர்களை அபகரித்துக்கொண்டு போயினே னெனினும் இவர்கட்கு எந்த விதமான

தீங்கு செய்யவும் எனக்கு மனம் வராமையால் இதுவரையில் என்னுடைய இன்னுயிர்போல் இவர்களைக் காப்பாற்றி வந்தேன். தமக்குப் பகையாக மச்சநாட்டுப் படை வந்ததையும் எதிர்க்கத் தமது படை புறப்பட்டு வந்ததையும் அரண்யத்திலிருந்த நாங்கள் தெரிந்து கொண்டவளவில், "மன்னன் விரோதியே யெனினும் தன் நாட்டுக்கு உழைக்க முன்வருபவனே அறிஞன்" என்றுகருதிய நான் இவர்களுடன் தமதுபடையொடுசேர்ந்துபோர்புரிந்தேன். இப்படிப்பட்ட ஒரு சந்திப்பு நேருமென்பதை நான் கனவிலும் அறியேன். நன்மையோ தீமையோ எது நேரவிருப்பினும் அதற்குரிய யாவும் பிரயத்தினமின்றித் தாமே வந்து சேருமென்பது கண்டோம்! கண்ணியமுள்ள அரசே, சித்தப்படி எது செய்யத் தக்கதோ அதனை ஆஞ்ஞையிடுக!" என்றான்.

இதுவரையில் ஸம்பத் குமாரமூர்த்தியைத் தங்களுக்குத் தந்தையாகக் கருதியிருந்த இரண்டு சிறுவர்களுக்கும் உண்மை வெளிப்படவே அளவிறந்த மகிழ்ச்சியும் வியப்பு மடைந்தவர்களாய்த் தங்கள் இருகரங்களையுங் குவித்துக் கும்பிட்டுக் கொண்டு நின்று "நாங்கள் தந்தையாகிய உம்மைவிட்டுப் பிரிந்திருந்து காட்டிலே வசிக்க நேரிட்டதெனினும், இந்த நல்ல சமயத்திலே போர்முகத்திலே முன் வந்து எதிரிகளை எதிர்த்து எங்கள் புயபலத்தைக் காட்டச் சமயம் வாய்த்ததுபற்றிக் களிக்கின்றோம். இந்த ஊழியர் தமக்குச் செய்யுமாறு எங்களைக்காப் பாற்றிவந்த எங்களுடைய தந்தைக்கு நேரான இந்

தப் பிசகுவைத் தாம்மன்னித்து எங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று பிரார்த்தித்துக்கொண்டனர். வேந்தன் பரமானந்த மடைந்து, உங்களுடைய அறிவும் ஆற்றலும் எனக்குத் தக்க தருணத்திலே பயன்பட்டதுபற்றி மகிழ்கின்றேன். எல்லாம் இறைவன் செயலென்பது கண்டேன். அவன் கருணை உங்களிடம் குறைவுறு திருக்குமாறு அவன் திருவடியைத் தியானிக்கின்றேன்" என்றுகூறித் தன் மைந்தர்களைத் தன் இருகாங்களாலும் தழுவிக்கொண்டு பெருமகிழ்ச்சியுடன் ஸம்பத் குமாரமூர்த்தியைப் பார்த்து "உம்மிடம் கொண்ட பகையை மறந்தேன்" என்றான்.

இச்சமயம் நோக்கி, ஹைமவதி சற்றுமுன்வந்து "என் அருமைச் சகோதரர்களே, காட்டிலே நான் தன்னந்தனியே அகப்பட்டுக்கொண்டு சோற்றுக்குக் கஷ்டப்பட நேர்ந்த சமயம் எனக்கு என் சகோதராகிய உங்களுடைய சோற்றை யுண்ணவும் உங்களுடன் இரண்டொருதினம் வசிக்கவும் உங்களாலே நான் மனச்சமாதானமடையவும் பிறகு உங்களுடைய மனம் வருந்தி எனக்கு நீங்கள் பிரேதச்சடங்கு செய்யவும் அப்பால் நீங்கள் இங்குவந்து உலகம் புகழ்ந்து பேச இவ்வாறு சந்திக்கவும் முன்னின்ற இறைவன் திருவருட் பெருமையை நாம் எப்படிப் புகழ்வது? என் அருமைச் சகோதரர்களே, உங்களுக்கு ஜகதீசன் கருணைபுரிவான்" என்றாள். அவர்கள் உடனே கரங்குவித்துப் பணிந்தனர். பிறகு ஸம்பத் குமாரமூர்த்தி தன்னிடம் காட்டிய கருணையைப்பற்றிச்

சிறிது ஹைமவதி பேசிமுடித்து, அப்பால், தனக்குச் சிறிதுகாலம் எஜமானயிருந்த மச்சநாட்டுச் சேனாதிபதியை மன்னிக்குமாறு மன்னனிடம் கேட்டுக்கொண்டாள். அரசன் ஹைமவதியின் அறிவை யெண்ணி உள்ளங்களிகூர்ந்து அந்தச்சேனுதிபதியை மன்னித்தான். பின்னர், சுந்தராராஜனை "ஹைமவதி அரசன் முன்னுக்கு அழைத்து அவன் தனக்குச் செய்த உபகாரத்தை வியந்துகூறி அப்பால் அவன் தனக்களித்த மருந்தைப்பற்றிப் பிரஸ்தாபித்தாள். உடனே சுந்தராராஜன் அம்மருந்து தனக்கு இன்னுரால் கொடுக்கப்பட்ட தென்பதையுங் கூறினுன். அதைக்கேட்டுக்கொண்டு அங்கு நின்ற அரண்மனை வைத்தியன் அம்மருந்து ராணியினிடம் கொடுக்கப்பட்டதற்குக் காரணந் தெரிவித்தான். அதைக்கேட்டு யாவரும் வியப்படைந்தனர். அரசன் தன் மனைவியின் வஞ்சக எண்ணத்தையும் அவள் செய்கையையும் எண்ணித் தலைகுனிந்தான்!

இவ்வாறு யாவும் இனிது முடியவே பிறகு அரசன் எல்லோருடனும் இந்தாபுரிபோய்ச் சேர்ந்தான். இப்பொழுது மச்சநாட்டு மன்னனிடமிருந்து சமாதானக் கடிதம் வந்தது. புவனேந்திரன் அவ்வேந்தனுடு சமாதானஞ் செய்துகொண்டான்; அதற்குக் காரணம் தன்னுலே விடுவிக்கப்பட்ட சேனுதிபதியென அறிந்து மனமகிழ்ந்தான்.

இதன் பிறகு சகல வைபவத்துடனே ஹைமவதிக்கும் சுந்திரகுடனுக்கும் திருமணம் நடந்தேறியது. எல்லோரும் தம்பதியை வாழ்த்தினர்கள்; ராணியை இழிவுபடுத்திப் பேசினர்கள். ராணியும் தான் செய்த பிழையை யுணர்ந்து அரசனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். பிறகு எல்லோரும் சுகமாக வாழ்ந்து வந்தார்கள்.

சுபம்

முற்றிற்று.

78108